# ஜாமக்காரன்


# JAMAKKARAN

ஜா
ம
க்
கா
ர
ன்
JAMAKKARAN

VOLUME - 2 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 1

JANUARY 2018 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=




*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே !

உங்கள் யாவருக்கும் நாங்கள் எங்கள் குடும்பத்தோடு இணைந்து **2018ம் புதுவருட வாழ்த்துதலை** கூறுகிறோம்.

**வாக்குத்தத்தம்:**

ஒவ்வொரு வருடமும் புத்தாண்டிலே **இவ்வருட வாக்குத்தத்தம்** என்று ஒரு அட்டையை பல சபைகளில் கொடுப்பார்கள். இவ்வருட **தீர்க்கதரிசனம்** என்றும் சில **கள்ள தீர்க்கதரிசிகள்** ஒவ்வொரு வருடமும் கூறுவார்கள், அவைகளை தங்கள் பத்திரிக்கையிலும் எழுதுவார்கள். அவைகள் யாவும் தினசரி செய்திதாள்களில் வரும் **செய்திகளும்,பொய் தீர்க்கதரிசனங்கள்** ஆகும். அவைகளையும் நம்பவேண்டாம்.

இப்போது **புதுவருட தீர்க்கதரிசனம்** என்று அனைத்து **டிவி ஸ்டார்** ஊழியர்களும் **சபை பாஸ்டர்மார்களும்** கூறுவது இப்போதைய டிரன்ட்டாகிப்போனது. இதையே ஜாமக்காரன் வாசகர்களும் என்னிடம் எதிர்ப்பார்க்கிறார்கள். எல்லா ஊழியர்களும், புதுவருட வாக்குத்தத்த வசனம் எழுதுகிறார்கள், அறிவிக்கிறார்கள். நீங்கள் **புதுவருட வாக்குத்தத்தம்** வசனத்தை வாசகர்களாகிய எங்களுக்கு எழுதி அறிவிக்க கூடாதா? என்கிறார்கள்.

அப்படி எதிர்ப்பார்க்கும் வாசகர்களாகிய உங்களிடம் கேட்கிறேன். முந்தைய பழைய வருடங்களில் நீங்கள் மற்ற ஊழியர்களிடம் அல்லது உங்கள் சபை பாஸ்டரிடம் வாங்கிய வாக்குத்தத்தம் வசனம் என்னவாயிற்று? அது செத்துப்போனதா? அல்லது அந்த வாக்குத்தத்தம் பழமையாகி ரிப்பேர் ஆகி கிடப்பில் போட்டப்பட்டதா? யோசித்துப் பாருங்கள்! அந்த வாக்குத்தத்தம் இந்த புதுவருடத்துக்கு இனி பயன்படாதா?.

வேதத்தில் உள்ள **எல்லா வாக்குத்தத்தங்களும் எல்லா காலத்துக்கும் - எல்லா நாளுக்கும் - எல்லா நிமிடத்துக்கும்** உரியதாகும்.

# JANUARY 2018

**தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம், இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே!** என்று பவுல் கூறுகிறார். 2 கொரி 1:20.

வேதத்தில் உள்ள வாக்குத்தத்த வசனங்களை வாசித்து அதன் அர்த்தத்தை விளங்கிக்கொண்டு அந்த வசனங்களின் அடிப்படையில் வாழ கர்த்தரிடம் ஜெபித்து அந்த வசனத்தை உரிமையாக்கிக்கொள்ளுங்கள்.

## வாக்குத்தத்தம் சொல்லி ஜெபிப்பது என்றால் என்ன?

ஆண்டவர் கூறிய வார்த்தையை அவரிமே சொல்லி அந்த வசனத்தை அவருக்கே கூறி அவரை ஞாபகப்படுத்துவதுபோல் ஆகும். யோ 14:14. **என் நாமத்தில் நீங்கள் எதை கேட்பீர்களோ, அதை பெற்றுக்கொள்வீர்கள்** என்ற வசனத்தை உங்கள் ஜெபத்தில் குறிப்பிட்டு, ஆண்டவரே நீர் குறிப்பிட்டதுபோல் உம் நாமமாகிய இயேசுவின் நாமத்திலேயே கேட்கிறேன், கொடும் ஆண்டவரே! என்று கேட்கலாம்.

முதலாவது நீ இயேசுவை ஏற்றுக்கொள் அப்போது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று வேதத்தில் எழுதியிருக்கிறதே! ஆண்டவரே நான் உம்மை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன் என்பது உமக்கே தெரியும். ஆகவே அடுத்தது, நீர் செய்ய வேண்டிய காரியம் ஆகும். நீர் என் குடும்பம் முழுவதையும் குறிப்பாக என் மனைவியை,கணவன், பிள்ளைகள் யாவரும் நான் அனுபவிக்கும் உம் இரட்சிப்பின் சந்தோஷத்தை அவர்களும் அனுபவிக்கவேண்டும். அதை நீர்தானே செய்யவேண்டும! நீர் செய்வீர் என்றுதானே! நீர் எழுதிய வேதம் கூறுகிறது! சீக்கிரம் அதை நிறைவேற்றி தாரும் ஆண்டவரே! என்று கேட்பதுதான் **வாக்குத்தத்தம்** கூறி ஜெபிப்பது ஆகும்.

உதாரணமாக ஒரு குற்றவாளி, அவனுக்காக வாதாடும் வக்கீல்(ஜட்ஜ்) நீதிபதியிடம் கூறுகிறார். இந்த சட்டப்படி சட்டம் நெம்பர் இதுதான் என்று குறிப்பிட்டு, இந்த சட்டப்படி இவனை விடுதலை செய்யலாம் என்று வக்கீல் கூறுவதைபோல் யோசித்துக்கொள்ளுங்கள். நீதிபதிக்கும் அந்த சட்டம் தெரியும் அவரும் அந்த சட்டத்தை படித்து வந்தவர்தான், ஆனால் அந்த வக்கீல் அந்த சட்டத்தை சுட்டிக்காட்டும்போது உடனே நீதிபதி நீர் சுட்டிகாட்டிய சட்ட எண் 14 ன்படி நான் அவனை விடுவிக்கிறேன் என்பார். அதே மாதிரிதான் நாம் ஜெபத்தில் வாக்குத்தத்தம் கூறி அல்லது குறிப்பிட்டு ஜெபிப்பதாகும். வேதத்தில் அப்படிப்பட்டதான வாக்குத்தத்த வசனங்களை எல்லாம் அந்த வசனத்தின் கீழே கோடிட்டு அல்லது மணனம் செய்து ஜெபத்தில் அவைகளை உபயோகிக்க வேண்டும். வாக்குத்தத்தப்படி ஆண்டவர் தாம் வேதத்தில் எழுதியபடியே அதை குறிப்பிட்டு ஜெபிக்கும் நமக்கு ஏற்ற சமயத்தில் நிறைவேற்றி தருவார். ஆகவே வேதத்தில் எழுதப்பட்ட அனைத்து வாக்குத்தத்த வசனங்களையும் விசுவாசத்தில் உரிமையாக்கிக் கொள்ளுங்கள்

▣ என் வாசகர் ஒருவர் எனக்கு கடிதம் எழுதும்போது கடந்த 37 வருடங்களுக்கு முன் என் வாழ்க்கையில் நான் நம்பிக்கையற்று இருந்த நிலையில் உங்களுக்கு கடிதம் எழுதினேன். அதற்கு நீங்கள் ஜெபித்து பதில் எழுதினீர்கள். அப்போது அந்த கடித்தில் நீங்கள் குறிப்பிட்டு எழுதிய வசனம் "**நம்முடைய தேவன் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும்** நம்முடைய

**தேவன். நம்முடைய மரண பரியந்தம் நம்மை நடத்துவார"** சங் 48:14 என்று எழுதினீர்கள். அன்று முதல் அந்த வசனம் என்னை தேற்றியது, வழி நடத்தியது. நம்பிக்கையற்று இருந்த எனக்குள் நம்பிக்கை உண்டாக்கியது. நான் மிகவும் நன்றாக ஆவிகுரிய ஜீவியத்திலும், பணம் சம்பாதிப்பதிலும் பெரிதும் வளர்ந்துவிட்டேன். என் பிள்ளைகள் யாவரும் உயர்ந்த நிலையில் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த குறிப்பிட்ட வசனம் அன்றும் - இன்றும் எனக்கும் என் குடும்பத்துக்கும் போதுமானதாக இருக்கிறது. இப்போதெல்லாம் நான் வாக்குத்தத்த வசன அட்டையில் என் ஆலயத்தில் வாங்க போவதில்லை. **இந்த ஒரு வசனமே** என் மரணம் வரை எனக்கு போதுமே என்று எழுதினார். இந்த சகோதரர் குறிப்பிட்டதுபோல் எல்லா காலத்துக்கும் எல்லோருக்கும் இந்த வசனம் போதுமே ! ஆகவே வருடவருடம் புது புது வாக்குத்தத்தை வசனத்தை வாசகர்கள் எதிர்பார்க்காதீர்கள்.

# சி.எஸ்.ஐ.வரலாறு:

மூன்று மாதமாக CSIயை பற்றி நான் ஜாமக்காரனில் தொடர்ந்து எழுதியது சிலருக்கு சலிப்பு ஏற்பட்டதாக எழுதினார்கள். பெரும்பாலானவர்கள் மிக **அற்புதம்** என்றும் ஒருவர் **சூப்பர்** என்றும் எழுதினார்கள். எனக்கு **எல்லா சபைகளிலும்** வாசகர்கள் ஏரளமாக உண்டு. அவரவர்கள் சபை பிரச்சனைகளுக்கு ஆலோசனை கூறுவதும் சபை உபதேச தவறுகளை வாசகர்களுக்கு சுட்டிக்காட்டி எது சரி என்று அறிவிப்பதுதான் **என் பத்திரிக்கை ஊழியம்** ஆகும்.

**அந்நியபாஷை** என்ற பெயரில் ஜெபத்தில் உளராதீர்கள். **அன்னிய பாஷை அடையாளம் அல்ல** என்று எழுதினேன். பலர் அதை விரும்பவில்லை. ஆனால் பலன் கிடைத்ததே! **பல பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள்** இப்போது மிக நன்றாக உணர்ந்துவிட்டார்கள்.

TPM(சிலோன் பெந்தேகோஸ்தே சபை) பாஸ்டர் ஒருவர் ஒரு வீட்டுக்கு அடிக்கடி வந்து அவர்களுக்கு வரும் ஜாமக்காரனை அந்த பாஸ்டர் வாசித்து சத்தியத்திலே தெளிவு பெற்றுவிடடேன் என்று அந்த வீட்டாரோடு அவர் கூறியிருக்கிறார். மேலும் அவர் பல நல்ல ஆலோசனைகைளயும் உபதேச தெளிவுகளையும் **ஜாமக்காரன்** மூலம் பெற்றேன என்றும் கூறி இப்போதுதான் என் சபையின் பல உபதேசங்கள் **மிக தவறு** என்பதையும் என்னுடைய **சீனியர் பாஸ்டர்** ஒரு மாய்மாலக்காரர் என்பதையும் அறியலானேன். அவர் பேசும் **அந்நிய பாஷையும்** பொய் என்பது விளங்கிற்று என்றாராம். இதை கேட்கும்போது எனக்கு எத்தனை ஆறுதலாக இருக்கிறது தெரியுமா? நான் பலரிடம் திட்டும், **சாபமும்** வாங்கிக்கொண்டே ஜாமக்காரனில் எழுதிய **அந்நியபாஷையின்** விளக்கம் வீண்போகவில்லை. கர்த்தருக்கே மகிமை.

அப்படியே CSIயைப்பற்றி ஜாமக்காரனில் எழுதியவுடன் ஆங்காங்கே பலர் CSI சீர்திருத்ததுக்காக ஜெபிக்க தொடங்கிவிட்டார்கள். இதில் ஆச்சரியம் என்னவென்றால் CSIயில் உள்ள குறிப்பிட்ட 5 பிஷப்மார்கள் ஒன்று கூடி நான் எழுதிய CSI பற்றிய விவகாரங்களை தங்களுக்குள் பகிர்ந்துக்கொண்டு நாம் நம்மை **பிஷப்** என்று கூறுவது நம் சபை மக்களிடமே **நமக்கு மரியாதை** இல்லாமல்போனது. பல இடங்களில் உள்ள பல பிஷப்மார்களின் தவறான செயல்கள், ஊழல்கள் எல்லாம் நம் எல்லாருக்கும் தலைக்குனிவை உண்டாக்கிவிட்டது. அப்படிப்பட்ட பிஷப்மாரை நாம் திருத்த இயலாது. ஆனால் நாம் கூடி அவர்களுக்காக அடிக்கடி

ஜெபிப்போம் என்று தீர்மானித்து இதுவரை இரண்டுமுறை கூடி இந்த பிஷப்மார் ஜெபித்துள்ளார்கள்.

**கேரளா, ஆந்திரா, கர்நாடகம்,**இந்த மாநிலங்களில் உள்ள பிஷப்மார்களோடு தமிழ்நாட்டில் உள்ள ஒரு பிஷப்பும் இவர்களோடு கூடி இரகசியமாக ஜெபிக்க ஆரம்பித்து விட்டார்களே! நான் எழுதியது வீண் அல்ல. நீங்கள் யாவரும் ஜெபித்ததும் வீண் அல்ல! நீங்கள் என் எழுத்தை ஊக்குவித்ததும் வீண் அல்ல என்றெல்லாம் என் வாசகர்கள் அறிவிப்பதை அறியும்போது துள்ளிகுதித்து தெயவத்தை துதிக்க வேண்டும்போல் இருக்கிறது! கர்த்தர் என் அலைச்சலை கண்டார். என் முயற்சியை அறிந்தார். என் நோக்கத்தையும் அறிந்தார்! என்பதற்காக தேவனை துதிக்கிறேன். கர்த்தருக்கே கனம் மகிமை உண்டாவதாக.

▣ பல இடங்களீல் **ஆசீர்வாத தட்டு** என்ற பிசாசின் குறுக்குவழி வியாபாரத்தில் காணிக்கை சேகரிப்பதை **சபை கமிட்டியாக** பேசி நிறுத்திவிட்டதாக அந்த சபை பிரமுகர்கள் கூறியதை அறிந்து அந்த சபைகளுக்கு ஏன் வாழ்த்துதலை கூறுகிறேன். கர்த்தருக்கும் நன்றி கூறுகிறேன்.

# CSI சபைகளை சரிப்படுத்த இனி CSI சபை செய்யவேண்டியது என்ன?

## குறிப்பாக

## ஆயர்கள், பிஷப்மார்கள் செய்யவேண்டியது என்ன?

முக்கியமாக கவனிக்கப்படவேண்டியது **குடிக்கு** அடிமையான **ஆயர்களை** வெளியே தள்ள வேண்டும். **குடிக்கும் ஆயர்களின்** எண்ணிக்கை இப்போது ஒவ்வொரு டையோசிஸ்ஸிலும் கூடிக்கொண்டே போகிறது. **பிஷப்மார்** அப்படிப்பட்டவர்கள்மேல் கண்டிப்பாக **நடவடிக்கை** எடுக்கவேண்டும். குறிப்பாக **பெண்களிடம்** தவறாக நடந்துக்கொள்ளும் **ஆயர்மார்கள்மேல்** பிஷப் அவர்கள் **மிகக்கடுமையான நடவடிக்கை** எடுத்தேயாகவேண்டும்.

எப்போதும் குடிக்காமல் **சினாட் மீட்டிங்காக** வரும்போது மட்டும் குடிக்கும் சில நல்ல **ஆயர்கள்** DC **மெம்பர்கள்** உண்டு. அவர்களை **லாட்ஜில்** தங்க வைக்கும் ஏற்பாடுகளை கவனிக்கும் பொருப்புகளை ஏற்கும் அந்தந்த குறிப்பிட்ட **டையோசிஸ் ஆயர்களே** மது பாட்டில்களை ஆயர்களுக்கு சப்ளை செய்கிறார்கள். ஆயர்களையும் குடிக்க வைக்கும் அந்த குறிப்பிட்ட சோதனை சமயத்தில் குடிக்க ஏற்பாடு செய்யும் அப்படிப்பட்ட நபர்களிடமிருந்து ஆயர்களிடமிருந்து **சினாட்** கூட்டத்தில் கலந்துகொள்ளப்போகும் ஆயர்கள் தங்களை காத்துக்கொள்வது நல்லது. அதை குறித்து ஆயர்கள் எச்சரிக்கையாக இருங்கள். பெரும்பாலான CSI **லே செயலர்கள்** டையோசிஸ் **நிர்வாகிகள் குடிக்கு அடிமையானவர்களாக** இருக்கிறார்கள். அவர்களைக்குறித்து வேதத்தின் நியாயதீர்ப்பு என்னவாக இருக்கும் என்பதை நீங்களே வேதத்தை வாசித்து அறியுங்கள்.

# ஆயர்களின் மனைவிகளுக்கு ஆவிக்குரிய ஆலோசனை கூட்டம் அவசியம்

**ஒவ்வொரு டையோசிஸ்ஸிலும் ஆயர்களின் மனைவிகளுக்காக** விசேஷ கூட்டம் நடத்தப்பட்ட வேண்டும். காரணம் **ஒவ்வொரு ஆயர்களின்** தனிப்பட்ட **பலவீனம், பாவம் ஆகியவைகளை ஆயர்களின்** மனைவிமார் நிச்சயம் அறிவார்கள். ஆயர்கள் **இரவிலே குடிப்பது**, அவர்களின் **தவறான ஜீவியம், பண** விஷயத்தில் சாட்சியில்லாதது இவைகளை மிக நன்றாக அறிந்தவர்கள

**ஆயர்களின் மனைவிமார்கள்தான்.** ஆகவே அவர்களுக்காக விசேஷ ஆவிக்குரிய ஆலோசனை கூட்டம் மிக முக்கியம்.

**ஆயர் ஊழியம்** செய்யும் தங்கள் கணவன்மாரிடம் அவர்களின் மனைவிமார்கள் ஜெபத்தோடு அவர்களுக்கு **தேவ பயத்தைக்** குறித்து ஞானத்தோடு ஆலோசனை கூறும்படி மனைவிமாரிடம் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். ஊழியர்களுக்கும் **சாட்சி மிக முக்கியம்** என்பதை அறிவுறுத்த வேண்டும். அந்த ஆயர் மனைவிமார்களுக்காக நடத்தப்படும் கூட்டங்களில் பிரசங்கிக்க **முதிர்ச்சிபெற்ற** நல்ல **பிரசங்கிமார்களை** அழைத்து ஏற்பாடு செய்யவேண்டும். கேரளாவில் சில டையோசிஸ்களில் அப்படிப்பட்ட கூட்டங்களை **ஒவ்வொரு வருடமும்** நடத்துக்கிறார்கள். ஆயர்களின் மனைவிமார் அவர்களின் கணவருக்காக இரகசியமாக **உபவாசித்து ஜெபிக்க தொடங்கினால்** ஆவியானவர் **ஆயர்களின்** உள்ளத்தில் கிரியை செய்வார். அது திருமண்டலத்துக்கு நல்லது. சபைக்கு நல்லது. அவர்கள் குடும்பத்துக்கும் நல்லது.

தங்கள் டையோசிஸ்ஸின் ஆவிக்குரிய வளர்ச்சியை குறித்து ஒவ்வொரு **பிஷப்மார்களையும் கர்த்தர் கணக்கு** கேட்பார் என்பதை ஒவ்வொரு பிஷப்மாரும் அறியவேண்டும்.

முகதாட்சன்யம் பார்க்காமல் **தவறு செய்யும் ஆயர்கள்மேல்** துணிந்து எடுக்கும் நடவடிக்கை மூலம் மற்ற ஆயர்களுக்கு அது பாடமாகவும்,பயத்தையும் ஏற்படுத்தும். திருச்சபைக்கு அது மிக நல்லது.

CSI டையோசிஸ் பணத்தை கொள்ளையடிப்பவர்கள் அட்மிஷன், **அப்பாயிமெண்ட், கடைகள் வாடகைவிடுவது, கடைகளின் அட்வான்ஸ் பணத்தின் பெரும் பகுதியை கணக்கில் காட்டாமல் கொள்ளையடிக்கும் நபர்கள், கட்டிட பணி கான்ட்ராக்ட் விடுவதில் நடக்கும் பெரும் ஊழல்** இப்படிப்பட்ட காரியங்களை செய்யும் சாட்சியில்லா **நிர்வாகிகளிடமிருந்து பிஷப்மார்கள்** தங்கள் கரைபடியாமல் தங்களை காத்துக்கொள்வது மிக முக்கியம். பிரச்சனை வந்தால் அதன் தண்டனை அத்தனையும் **பிஷப்** தலையில்தான் தாங்கவேண்டி வரும். **தண்டனைகளையும் பிஷப்மார்கள்தான்** அனுபவிக்கவேண்டியதாகும். கர்த்தரும் பிஷப்மார்களிடம்தான் கணக்கு கேட்பார்.

இப்படிப்பட்ட ஊழல்களை CSI,லூத்தரன் சபைகளியிலிருந்து நீக்கி CSI, **லூத்தரன்** சபைகள் சுத்தமாக கழுவப்பட வேண்டுமானால் **ஞானமாக** அதே சமயம் **நியாயமாயும் கண்டிப்பாகவும், சட்டப்படியும்** நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

▣ முதலாவது சபை என்னும் **"திராட்ச தோட்டங்களை கெடுக்கும் குழிநரிகளையும், சிறு நரிகளையும்.... பிடியுங்கள்"**. உன்னத 2:15. என்று வேதம் கூறுகிறது.

### சாட்சியில்லா தன் டையோசிஸ்ஸைப்பற்றி கண்ணீர்விட்ட ஒரு பிஷப்

என் அனுபவத்தில் ஒரே ஒரு பிஷப் மட்டும் கலங்கிய கண்களோடு என்னிடம் கூறியதாவது:. என் டையோசிஸ்ஸில் **குடிபோதையில்** பிரசங்கிக்கும் 34 ஆயர்களைப்பற்றி சபை ஜனங்களின் புகார்கள் எழுத்து மூலமாக வந்துள்ளது. எனக்கு கடிதம் மூலமாக அறிவிக்கப்படாத மற்ற குடிகார ஆயர்களைப்பற்றியும் நானே நன்கு அறிவேன். எத்தனை ஆயர்களை நான் நேரில் அழைத்து எச்சரிப்பது? எத்தனை அயர்கள்மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து எச்சரிப்பது? **குடியை நிறுத்தாத ஆயர்கள் பெண்கள்** விஷயத்தில் **பலவீனமான ஆயர்கள், இரண்டு மனைவிகளை** வைத்திருக்கும் **ஆயர்கள்** இப்படிப்பட்ட பகிரங்க பாவத்தில் விழுந்து கிடக்கும் **எத்தனை ஆயர்களை** நான் டிஸ்மிஸ் செய்வேன், ஆயர்களின் மனைவி, பிள்ளைகள் யாவரும் இரகசியமாக என் வீட்டில் வந்து என் காலை பிடித்து அழும்போது நான் எப்படி நடவடிக்கை எடுப்பேன்? நானும் **ஆயராக பணியாற்றி** வந்தவன்தானே ! சொல்லுங்கள்! நீங்கள் என் நிலையில் இருந்தால் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என்று கூறி 9 பைல்களை என் முன் வைத்தார். அதில் வந்த புகார்கள் யாவும் ஆயர்கள்பற்றிய **செக்ஸ் விஷயம் அடங்கியதாகும். கட்டிடம் கட்டிய** விஷயத்தில் **சிமெண்ட்** வாங்கியதில் இப்படி பல விஷயங்களில் **ஊழல்** செய்தவர்களைப்பற்றி ஆதாரங்கள் யாவும் பைல் செய்யப்பட்டுள்ளது. அவைகளை வாசித்து அதிர்ந்துப்போனேன்.

உண்மையில் **பிஷப்மார்களின்** நிலை இருதலை கொள்ளிபோல இருப்பதை அன்றுதான் அறிந்தேன். மேலும் அவர் கூறியதாவது. ஒன்று நான் **பிஷப் பதவியை ராஜினாமா** செய்யவேண்டும் அல்லது அவர்களை **தண்டித்தே** ஆகவேண்டும். அப்படி **தண்டிக்கும் அதிகாரத்தில்** என்னை பதவி உயர்வு கொடுத்து அமர வைத்திருக்கும் என் தெய்வத்துக்கு நான் என்ன பதில் கூறுவேன். பல ஆயர்களுக்குபின்னே **பெரும் பணக்காரர் ஆதரவு** இருக்கிறது. **அரசியல் செல்வாக்கு**, டையோசிஸிஸ் **லே செயலரின் சிபாரிசு** ஆகியவைகள் என்னை செயலற்றவனாக்குகிறது.

நான் இப்போது எழுதியது **தெய்வ பயமுள்ள நேர்மையான ஒரு பிஷப்பின்** உள்ள குமுறல் ஆகும்.

# இனி பிஷப்மார் - மாடரேட்டர் செய்ய வேண்டியது என்ன ?

**ஒரு பாஸ்டர், ஆயர், பிஷப், ஊழியர் அல்லது சுவிசேஷகர்** ஆகிய யாராயிருந்தாலும் பாவத்தில் விழுந்துவிட்டால் அவரை தண்டிக்க நியாயம் தீர்க்க கர்த்தர் இருக்கிறார். ஆனால் சபை என்று வரும்போது அல்லது மிஷனரி ஊழியம் என்று வரும்போது பாவம் செய்தவர் சபை பொருப்பிலிருந்து அல்லது மிஷனரி பொருப்பிலிருந்து தயவு தாட்சன்யம் இல்லாமல் நீக்கப்படவேண்டும். இது மிக அவசியம்.

# நம் தேவன் மகா பரிசுத்தமுள்ளவர்

நான் **பரிசுத்தராயிருப்பதுபோல நீங்களும் பரிசுத்தமாக இருங்கள்** என்றுதான் கட்டளையிட்டிருக்கிறார். அந்த **பரிசுத்தம்** ஒரு ஊழியனுக்கு இல்லாமல்போனால் அவன் **ஊழியம் செய்யும் தகுதியிழக்கிறான்.** நம் சுவிசேஷமே **பரிசுத்தத்தை** அடிப்படையாக கொண்டதால்தானே **நற்செய்தி** (GOOD NEWS) என்று அறிவிக்கப்படுகிறது.

அந்த **பரிசுத்தம் இழந்துபோனால்** மற்றவர்களுக்கு எப்படி பரிசுத்தத்தைப்பற்றி போதிக்க முடியும். சபையில் **வாலிப பெண்கள், வாலிப பையன்மார் பாவம்செய்த ஆயரை, பாஸ்டரை** ஆராதனை நடத்தும்போது எப்படிப்பட்ட கண்ணோட்டத்தில் பார்ப்பார்கள்.

கடந்த மாதம் (டிசம்பர்) **அமெரிக்கா நாட்டில்** 3 மந்திரிகள் பதவியிலுருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குற்றசாட்டு என்ன?. அவர் லேப்டாப்பில் பெண்களின் நிர்வாணபடகாட்சிகள் வைத்திருந்ததாக குற்றச்சாட்டு. **அந்த மந்திரி பெண்ணுடன் சரீர தொடர்புக்கொண்டார்** என்று கூறப்படவில்லை. ஆனால் அவர் மந்திரி பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

சாக்கடை என்று கூறப்படும் அரசியலிலேயே ஒரு அரசாங்கத்தில் மந்திரிகள்மேல் இப்படிப்பட்ட பரிசுத்த நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றால் இன்று நம் **பிஷப்மார்,** சபை **ஆயர்கள்** இரு மனைவி-**மூன்று மனைவி** என்று வைத்திருப்பதை சபை மக்கள் சுட்டிக்காட்டியும் கண்கூடாக அறிந்தும் ஆயரின் **மனைவியின்** வாய்மொழி கேட்கும் **பிஷப்** நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பிஷப் அவர்கள் யாருக்கு பயப்படுகிறார்?

**சபையில் உள்ள கணவான்களுக்கு பயப்படுகிறாரா?** அல்லது நீ யோக்கியமா? என்று பிஷப்பை நோக்கி கேட்டுவிட்டால் என்ற பயமா? பிஷப் அவர்கள் குற்றமற்றவராக இருந்தால் தைரியமாக நடவடிக்கை எடுக்கலாமே?.. உடனே இந்த உலகில் யார் பாவம் செய்யாமல் இருக்கிறார்கள் என்ற குதற்கமான கேள்வி கேட்பார்கள். அப்போது தைரியமாக **பிஷப் அவர்கள் நான் யோக்கியம்** என்று கூறலாமே!.

**இயேசு கிறிஸ்து பொதுமக்களிடையில் பேசும் போது என்னில் பாவம் உண்டென்று உங்களில் யார் நிரூபிக்கமுடியும் என்று பகிரங்கமாக சவால்விட்டு பேசினாரே!**

**தவறுகள் திருத்தப்படமுடியும், ஊழல்கள் திருத்தப்படமுடியும்**, குடியை நிறுத்த முடியாவிட்டால்கூட அதற்கென்று வைத்தியம் உண்டு. அவர்கள் அந்த குடியிலிருந்து மீண்டுவரலாம். ஆனால் **சரீர பாவம்** செய்துவிட்ட **ஒரு ஆயர்** அல்லது **ஊழியர்** அந்த பாவத்தை நிறுத்தி **மனம்திரும்பினாலும்** அவர்கள் **ஆயர்** அல்லது **பாஸ்டர்** அல்லது சபையின் **மூப்பன், நிர்வாகி** என்ற தகுதியை இழந்துவிடுகிறாரகள். அவர்கள் **சபைக்கு** வரலாம், **திருவிருந்து** எடுக்கலாம், தான் **மனந்திரும்பிய சாட்சியை கூறி பிரசங்கம் செய்யலாம்** ஆனால் **ஆயர், பாஸ்டர்** என்ற தகுதியை அவர் இழக்கிறார்.

**தூத்துக்குடியில்** CPM (TPM) பாஸ்டர் ஒருவர் ஆலயத்தை பெருக்கும் பெண்ணுடன் சரீர பாவம் செய்துவிட்டார். **பல லட்சங்கள்** கொடுத்து அந்த பாவத்தை மறைக்க முயன்றார்

முடியவில்லை. உடனே TPM தலைமை அவரை பாஸ்டர் பதவியிலிருந்து நீக்கி அவர்களுடைய சபைகளுடைய கிறிஸ்தவ புத்தக் கடையின் மேனேஜராக வேலையில் அமர்த்தினார்கள்.அவரை ஊழியம் செய்ய அனுமதிக்கவில்லை. ஆகவே **பிஷப்மார்** இவ்விஷயத்தில் கடுமையாக நடவடிக்கை எடுக்காமல் போனால் பிஷப் அவர்கள் **தேவ கோபத்துள்ளாவர்.** நடவடிக்கை எடுக்காமல் போனால் மற்ற **ஆயர்களுக்கு** உடன் **பாஸ்டர்களுக்கும்** பயம் இல்லாமல் போய்விடும். அவர்களும் பாவம் செய்ய துணிகரம் கொள்வார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை நம் CSI, **லூத்தரன்** சபைகளில் **பிஷப்மார்** எடுக்காமல்போனால் **ஆயர்களுக்குள்** பாவம் பெருகும், அவர்களை எங்கு **மாற்றல்** செய்தாலும் அவர்கள் தங்கள் பாவங்களை தொடருவார்கள். **சபை மக்களுக்குள்** பரிசுத்த குலைச்சல் உண்டாகும்.

ஜெபியுங்கள். **CSI,லூத்தரன்** சபைகள்மேலே எழுதப்பட்ட இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை களையவும் சபைகள் **ஆவிக்குரிய சபைகளாக** மாற கர்த்தர் உதவி செய்வாராக. ஆமென்.

▣ கத்தோலிக்க சபையில் உலகத்தின் பல்வேறு பகுதிகளில் சபையில் ஊழியம் செய்த Fபாதர்(ஆயர்) **ஆண் புணர்ச்சி பாவத்தில் ஈடுபடும் விவரம்** அறிந்த கத்தோலிக்க சபைகளின் தலைவர் போப் அவர்கள் அத்தனை பேரையும் பதவி நீக்கம் செய்துவிட்டார். அப்படி பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எத்தனை தெரியுமா? 1840 ஆயர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள்.

## இயேசு கிறிஸ்துவின் கடின நடவடிக்கை, ஆலோசனையை பிஷப்மார் கவனிக்கவும்

**"ஒரு சகோதரன்..... குற்றஞ்செய்தால் (பாவம் செய்தால்) அவனிடத்தில் போய் நீயும் அவனும் தனித்திருக்கையில் (தனியாக அழைத்து) அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து. அவன் உனக்கு செவி கொடுத்தால் உன் சகோதரனை ஆதயப்படுத்திக்கொள்வாய்".**

அவன் செவி கொடாமற்போனால் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும் இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவி கொடாமற்போனால் அதை சபைக்கு தெரியப்படுத்து. பகிரங்கப்படுத்து (புது மொழிபெயர்ப்பு) சபைக்கும் அவன் செவி கொடாதிருப்பானானால் அவன் உனக்கு புற இனத்தான் போலவும் ஆயக்காரன் (பாவி) போலவும் இருப்பானாக. (கத்தோலிக்க வேதம்) மத். 18:15-17.

**கிறிஸ்மஸ் & புதுவருட வாழ்த்து அட்டையையும், விசேஷ காணிக்கையையும் இ.மெயில் கடிதங்களையும் எனக்கு அனுப்பிய யாவருக்கும் எங்கள் வாழ்த்துதலையும், நன்றியையும் அறிவிக்கிறேன்.**

**ஜாமக்காரன் வாசகர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை புத்தாண்டு வாழ்த்துதல் தெரிவித்துக்கொள்கிறேன். தேவ கிருபை உங்களோடு இருப்பதாக.**

கர்த்தரின் பணியில்

**டாக்டர். புஷ்பராஜ்**

# இயேசுவை தூங்க வைக்கும் பாட்டுகள் பெருகிவிட்டன.

▣ எங்கு பார்த்தாலும் சபைகளிலும் TVயிலும் இயேசுவை **நித்திரை**கொள்ளச்செய்யும் பாடலாக பாடல் வரிகள் அமைகிறது. **ஆரீரோ ஆரீரோ** தூங்கு அழகான பிள்ளையே தூங்கு, எனக்காக வந்தவரே **தூங்கு.**

இயேசுவை குழந்தையாக வர்ணிக்கிறதாக இப்படிப்பட்ட பாடலை இயற்றியவர்கள் கருதுகிறார்கள். இது வர்ணிப்பதில்லை. **தாலாட்டுவது** அல்லது **தூங்க வைப்பது.** அப்படி தூங்கவைத்துவிட்டால் நாம் எந்த பாவத்தையும் செய்யலாம். சில பெற்றோர்கள் இருமல் மருந்தை கொடுத்து தங்கள் சந்தோஷத்துக்கு தடையாக இருக்காதபடி சொந்த பிள்ளையையே **தூங்க வைத்துவிடுகிறார்கள்.**

இயேசு தூங்கிவிட்டால் எந்த பாவத்தையும் யாரும் எப்போதும் செய்யலாம். இப்படித்தான் பலர் நம் இயேசு நம்மை காணபதில்லை என்று கருதி இருட்டில் பாவம் செய்கிறார்கள். சினிமா தியேட்டரில் தியேட்டரின் கடைசி மூலை டிக்கட்டை எடுத்துக்கொண்டு இருவராக அமர்ந்து பெற்றேரர் அறியாமல், கல்லூரிக்கு போகாமல் பாவம் செய்கிறார்கள். ஆனால் நம் வேதம் சொல்கிறது, நீங்கள் எப்படி ஆரீரோ பாடினாலும் **தூங்கு பாலா** என்று தட்டிக்கொடுத்து பாடினாலும் **அவர் தூங்க மாட்டார்.**

121ம் சங்கீதம் அதைத்தான் கூறுகிறது. நம் கர்த்தர் **தூங்காதவரும் - உறங்காதவருமாக** இருக்கிறார்.

129ம் சங்கீதம் சொல்கிறது, கர்த்தாவே நீர் என்னை தூரத்திலிருந்து அறிகிறீர். என் **உட்காருதலை நடக்குதலை** யாவையும் அறிகிறீர். இப்படிப்பட்ட தெய்வத்தை இன்றைய திருச்சபைகள் அனைத்தும் தூங்கவைத்து பாட்டுகள் பாடி ஆராதிக்கிறது. அவரை தூங்க வைத்தபின் அனைத்து **ஊழலையும்** நிறைவேற்றுகிறது. இப்படிப்பட்ட அர்த்தம் இல்லாத பாடல்களை இனியாவது இயற்றாமல் பாடாமல் கவனமாக இருப்போம்.

இந்த உபதேசத்தை கத்தோலிக்க சபையிலிருந்து கற்றுக்கொண்டதாகும். கத்தோலிக்கர்கள்தான் இன்னும் **குழந்தை இயேசுவுக்கு** வல்லமை உண்டு என்று நம்புகிறார்கள். அதனாலேயே பல இடங்களில் **குழந்தை இயேசு பேராலயங்கள்,** குழந்தை இயேசு **நல் ஆலயம்** என்றெல்லாம் பெயர் வைத்து **அந்த குழந்தை இயேசுவை** வேண்டிக்கொண்டால் நேர்ச்சை நேர்ந்து மெழுகுத்திரி வைத்தால் விரும்பியதெல்லாம் கிடைக்கும் என்ற **சாட்சிகளை** பொய்யாய் பரப்பவிடுகிறார்கள். ஜனங்கள் அதையும் நம்பிவிடுகிறார்கள். அந்த **குழந்தை இயேசு** தரிசனம் கொடுத்ததாக கற்பனை கதைகளையும் அவிழ்த்து விடுகிறார்கள்.

கத்தோலிக்க சபையிலிருந்த மார்ட்டின் லூத்தர் மூலமாக இப்படிப்பட்ட தவறான உபதேசங்களை நீக்கி புதிதாக எழும்பிய புரோடஸ்டன்ட் சபையினரும் இன்னும் அவர்களின் இதைப்போன்ற தவறான உபதேசத்தை பின்பற்றிக்கொண்டிருந்தால் உங்களுக்காக மறுபடியும் ஒரு மார்ட்டின் லூத்தர் பிறந்து புரட்சி செய்தால்தான் நீங்கள் எல்லாம் அடங்குவீர்களா?

தயவுசெய்து **ஆரீரோ** பாடலை நிறுத்துங்கள், இயேசு வளர்ந்து 31 வருடம் ஊழியம் செய்து நமக்கு கற்பிக்க வேண்டியதெல்லாம் கற்பித்து மரித்து, உயிரோடு எழுந்து பரமேறிபோன அவரின் **இரண்டாம் வருகைக்கு** காத்திருக்கும் கிறிஸ்தவர்கள்தான் நாம். இன்னும் சிறுபிள்ளைகளைபோல குழந்தை இயேசுவை தாலேலோ- ஆரீரோ பாடி சபை மக்களை, சபை ஞாயிறு பிள்ளைகளை ஏமாற்றாதீர்கள். உங்கள் ஆவிக்குரிய ஜீவியம் வளரட்டும். நீங்கள் பால் குடிக்கிற வயதில் உள்ளவர்களைப்போல வளராத ஜீவியம் வாழ்ந்தது போதும்.

## அர்த்தமுள்ள பாடல்களை பாடுங்கள்

ஆராதனை ! ஆராதனை என்று வாயில் பாடும் பாடல் - ஆவியானவரே வாரும் என்றும் பாடும் பாடல் வேண்டாம்.

⊡ **ஆராதனை** ஆராதனை என்று முடியும் பாடல்களை விதவிதமான ராகத்தில் பாடினால் அது **ஆராதனை** ஆகிவிடுமா?

அதில் தேவன் சந்தோஷப்படுவாரா? உங்களைப்பார்த்துதான் கர்த்தர் கூறுகிறார். அவரகள் தங்கள் **உதடுகளினால்** என்னை ஆராதிக்கிறார்கள். ஆனால் அவர்கள் **உள்ளமோ என்னைவிட்டு** தூரமாக இருக்கிறது என்கிறார். என்ன பதில் கூறப்போகிறீர்கள் -

**அப்படியே ஆவியானவரே வாரும்** என்று ஜெபிக்காதீர்கள் - பாடாதீர்கள்

⊡ அவர் வரமாட்டார், **ஆவியானவரை ஜெபத்தில் அழைத்ததாக** வேத்தத்தில் எங்காவது வாசித்திருக்கிறீர்களா? இயேசுவின் **அப்போஸ்தலர்கள்** யாராவது ஆவியானவரே வாரும் என்று ஜெபித்திருக்கிறார்களா? உங்கள் பாஸ்டரிடம் இதைக் கேட்டு எனக்கு எழுதுங்கள்.

அதுபோலவே **ஆவியானவரே வாரும்** என்ற பாடலை பாடுவதையும் நிறுத்துங்கள். அவர் வர மாட்டார். **ஆவியானவரே** ஊற்றும் என்றும் உச்சரிக்காதீர்கள். அவர் தண்ணீர் அல்ல எண்ணெய்யல்ல அவைகள் ஆவியானவரை குறிக்க உபயோகிக்கப்பட்ட எபிரேயர்களின் வார்த்தையாகும்.

⊡ எபே. 1:13 நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்தியவசனத்தை கேட்டு விசுவாசிகளானபோது (அதாவது இரட்சிக்கப்பட்டபோது) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைப்போடப்பட்டீர்கள்.

வேதம் இப்படித்தான் போதிக்கிறது, ஆவியானவரை அழைத்ததால் அல்ல. ஸ்தோத்திரத்தையும் இயேசுவின் இரத்தம் என்ற வார்த்தையையும் வேகமாக கூறுவதாலும், சத்தம்போட்டு அல்லேலூயா, ஆமென் கூறுவதாலும், குதித்தாலும், தொண்டைகிழிய கதறினாலும் ஆவியானவர் வரவேமாட்டார். **மனம் திரும்புங்கள்** அந்த நிமிடமே ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் வந்துவிடுவார்.

இவைகளுக்கெல்லாம் சபைகளில் இன்னொரு **புரட்சி** உண்டாக வேண்டுபோல் தெரிகிறது.

அர்த்தமுள்ள சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்வோம்.

அர்த்தமுள்ள சாட்சியுள்ள பாடல்களையும் தேவனை மகிமைப்படுத்தும் பாடல்களையும் பாடுவோம்.

## முக்கிய அறிவிப்பு:

' என்னோடு **தொலைபேசியில்** தொடர்புக்கொள்ள முடியாதவர்கள், **கடிதங்கள்**மூலம் ஜெபகுறிப்புகளையும், குடும்ப பிரச்சனைகளையும் அனுப்பலாம். ' இ-மெயில் மூலம் நீங்கள் எனக்கு எழுதினாலும் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் தயவுசெய்து குறிப்பிட்டால், கடிதம்மூலமாக பதில் எழுத இயலும். வாரம் இரண்டு நாட்கள்மட்டும் வீட்டில் நான் இருப்பதால் நீங்கள் அனுப்பும் இ- மெயில்க்கு கடிதம்மூலம் என் பிராயணத்தில் உடனே பதில் எழுதமுடியும். அதனால் இ-மெயில் அனுப்புபவர்கள் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் அனுப்புங்கள்.

### காணிக்கை:

**சில வாசகர்கள் ஜாமக்காரன் பத்திரிக்கைக்காக காணிக்கை அனுப்பினேன் நீங்கள் பத்திரிக்கை அனுப்பவில்லை** என்று எழுதுகிறார்கள். மணியாடரில் நீங்கள் காணிக்கை அனுப்பும்போது எதற்காக அந்த பணம் அனுப்பினீர்கள் என்பது நீங்கள் எழுதமுடியாது. எனக்கு காரணமும் தெரியாது. ஆகவே பணம் அனுப்பிய உடன் ஒரு கடிதத்தில் உங்கள் முழு விலாசத்தையும் தொலைபேசி எண்ணையும் எழுதி எனக்கு பத்திரிக்கை அனுப்பவும் என்று அறிவிக்கவும். புதிய வாசகர்களாக இருந்தால் நான் புதிய வாசகர் என்று எழுதவும். நன்றி.

# மலேசியா
# தமிழ் சபைகளின் அவலம்

## விவாகரத்து - மறுமணம்

மலேசியா தமிழ் சபைகளுக்குள் இன்று **விவாகரத்து** சர்வ சாதாரணமாகிப்போனது. ஒவ்வொரு தமிழ் கிறிஸ்தவ வீட்டிலும் விவாகரத்து செய்த நபர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே இருக்கிறது. அதைவிட மோசமான செய்தி என்னவென்றால் **மனைவி** அல்லது **கணவன்** உயிரோடிருக்கும்போதே **மறுமணம்** செய்துகொண்டவர்களின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டேபோகிறது. அதைவிட கேவலம் **சபை பாஸ்டர்மார்கள்** இரண்டு முறை மூன்று முறை திருமணம் செய்தவர்களாக இருப்பதும் அப்படிப்பட்டவர்கள் சபையை நடத்துவதும் அவர்கள் துணிந்து **திருவிருந்து** பரிமாறுவதும் மிகுந்த வேதனை தருகிறது.

**"மேய்ப்பன் எவ்வழியோ ஆடுகளும் அவ்வழி** " என்ற பழமொழிக்கேற்ப சபை மக்களுக்கு **எது சரியான திருமணம்** என்பதை பிரசங்கிக்க வேண்டியவர்களே **இரண்டு** முறை இரண்டு மனைவிகளை விவாகரத்து செய்துவிட்டு **மூன்றாவது** மனைவியுடன் இந்த ஊழியர்கள் வீடு சந்திப்பு என்று கூறி காரில் உலா வருகிறாரகள்.

இதைவிட கொடூர பாவம் என்னவென்றால் இவர்களின் சபைகளின் **பிரதான மேய்ப்பன்** பிஷப் அல்லது **பிரசிடென்ட்** இவைகளை அறிந்தும் எப்படி இப்படிப்பட்ட ஆயர்களை சபையில் ஊழியம் செய்ய அனுமதிக்கிறார்கள்?. பிஷப் அனுமதித்தாலும் அந்தந்த **சபை மக்களில்** ஒரு சிலராவது இவர்களைப்பற்றி கேள்வி கேட்ககூடாதா? வேத வசனம் அறிந்த **கிறிஸ்தவர்கள் சபை மூப்பர்களாவது கேள்வி கேட்கலாமே?** இவைகளை அறிந்தும் சொரனை அற்று இருப்பது எப்படி? சபை மக்களை சபையின் மூப்பர்மார் திரட்டி தங்கள் எதிர்பை தெரிவிக்க இவர்களுக்கு தைரியம் வராதது ஏன்?

▣ **மலேசியா** சபை மக்கள் குறிப்பாக **மெத்தடிஸ்ட் லூத்தரன், ஆங்கிலிக்கன்** சபை மக்கள் என்னை மிகவும் அதிகமாக நேசிப்பவர்கள் ஆகும். 1970ம் வருடம் முதல் பலமுறை மலேசியா மக்களால் விரும்பி அழைக்கப்பட்ட **பிரசங்கியாக மலேசியாவுக்கு** பலமுறை சென்று வந்தவன் என்ற பெருமை எனக்குண்டு. அந்த காலத்திலேயே டவுனில் கன்வென்ஷன் நடந்தாலும் பகலில் எஸ்டேட்டில் குடியிருக்கும் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க செல்லுவேன். **பாமாயில்** தயாரிக்கும் **பாம் மரங்கள்** நிறைந்த தோட்டங்கள் நிறைந்த **எஸ்டேட்கள்** மலேசியா முழுவதும் நிறைந்திருக்கும் அந்த எஸ்டேட் மக்களுக்கு சுவிஷேசம் அறிவித்து பலர் வசனம் மூலம் **சுகம் பெற்று** பிசாசு பிடியிலிருந்து விடுபட்டு அதன் மூலம் **இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள்**

ஏராளம். அவர்களுக்காக வீடுகளில் ஆராதனை நடத்தினேன். அதன் பிறகு தகர கூரையால் கட்டப்பட்ட நீண்ட ஷெட் அமைத்து அதில் ஆராதனை நடத்தி அந்த சபையை அருகே உள்ள மெத்தடிஸ்ட் சபை பாஸ்டரிடம் ஒப்படைத்து வந்தேன். அதன் மூலம் பெருகிய மெத்தடிஸ்ட் சபைகள் ஏராளம். இதில் **மகிழ்ச்சி பத்திரிகை** ஆசிரியர் மரித்த பாஸ்டர் **ஜீவானந்தம்** அவர்களுக்கும் பெரும் பங்கு உண்டு.

இப்படி சபைகளை உருவாக்கியதால் எனக்கு மலேசியா சபை மக்கள் மீது மிகவும் பாசம் உண்டு. அன்று அவர்களுக்குள் இருந்த **தெய்வபயம், ஒற்றுமை தமிழர்கலாச்சாரம்** அத்தனையும் ஒழிந்துப்போன நிலையில் **முகமதிய காலச்சாரம், ஐரோப்பிய கலாச்சாரம்** அவர்களுக்குள் பெருகி **திருமணம்** என்பதற்கான **மரியாதை** அதற்கான கணம் (Rev) யாவும் அற்றுபோனநிலையில் உடுப்பை மாற்றுவதுபோல **கணவனை** மாற்றுவது **மனைவியை** மாற்றுவது **பலதாரங்களை** வைத்துக்கொள்வது அவர்களுக்குள் பெரிகினது. இப்படியா கிறிஸ்துவின் சரீரத்தை (சபையை) குத்தி வேதனைபடுத்துவது அவ்வப்போது மலேசியா வந்து போகும் சாதாரண ஊழியக்காரனாகிய எனக்கே மனம் இப்படி வேதனைபடுகிறதே? தன் இரத்தத்தை கிரயமாக கொடுத்து நம்மை வாங்கிய நம் தெய்வத்தின் மனம் இவைகளை அறியும்போது எத்தனையாய் வேதனைப்படும்.

▣ இந்தியாவில் திருநெல்வேலியில் இயேசுவை ஏற்றுக்கொண்ட முதல் பெண் **குளோரிந்தா** என்ற உயர்குல பிராமணப்பெண் ஆவாள் இவள். இயேசுவை ஏற்றுக்கொண்டு பல வருடமாகியும் இவளை வழிநடத்தின மிஷனரி அவளுக்கு ஞானஸ்நானம், திருவிருந்து கொடுக்க மறுத்தார். காரணம் அவளை உடன்கட்டை மரணத்திலிருந்து காப்பாற்றிய வெள்ளைக்கார போர் வீரன் அவளை ஊரில் யாரும் ஏற்றுக்கொள்ளாததால் அவனை தன்னோடு வைத்துக்கொண்டான். ஊர் ஜனங்கள் பலவாறு பேசுவார்கள் என்பதற்காகவே அவளை தன் மனைவியாக்கிக் கொண்டான். அதன்பிறகு தன் சொந்த நாட்டுக்கு திரும்பிவிட்டான். அங்கு அவனுக்கு ஏற்கனவே வெள்ளைக்கார மனைவி உண்டு. அந்த முதல் மனைவியிடம் குளோரிந்தாவின் நிலைமையை விளக்கி தன் மனைவியின் சம்மதத்தின்பேரில் குளோரிந்தாவை தன் மனைவியாக்கிக்கொண்டான். உடனே தன் தாய்நாடு திரும்ப போய்விட்டார். அங்கு வியாதி படுக்கையிலானார்.

இங்கு இந்தியாவில் குளோரிந்தா வசனத்தில் வளர்ந்தாள். மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டாள். ஆனாலும் **ஞானஸ்நானம் பெறவில்லை.** முறையற்ற திருமணம்தான் அவள் செய்தது. அப்போது அவள் இரட்சிக்கப்படவில்லை. அந்த போர் வீரன் TB வியாதியால் மரணம் அடைந்தபின்தான் **குளோரிந்தா** ஞானஸ்நானம் பெற்றாள், அதன்பின் அவளுக்கு திருவிருந்து கொடுக்கப்பட்டது.

அந்த காலத்தில் **மிஷனரிகள்** எத்தனை அருமையாக வசனத்தின்படி முதல் ஆத்துமாவை வழிநடத்தியிருக்கிறார்கள். கவனித்தீர்களா? திருநெல்வேலி மாவட்டத்திலேயே **முதல் கிறிஸ்தவள்** அதுவும் உண்மையான கிறிஸ்தவள். ஆனால் அவளுக்கே அன்றைய மிஷனரிகள் அவசரப்பட்டு ஞானஸ்நானம் திருவிருந்து ஆகியவைகளை கொடுக்காமல் அவளை **கணவன் மரிக்கும்** வரை காத்திருக்க வைத்த அந்த காலத்து **மிஷனரி எங்கே**? மூன்றாம் திருமணம் என்று அறிந்தும் **அதை நடத்தி வைக்கும்** ஆயர்கள், **பிஷப்மார்கள்** எங்கே?

இவர்களுக்கு வேத வசனம் தெரியும். வசன எச்சரிப்பு தெரியும். ஆனால் சபையில் பணம் மிகுந்தவர்களுக்கு இவர்கள் அடங்கிப்போகிறார்கள். வேத வசன சட்டத்தையும் **சபையின் சட்டத்தையும்** ஆளுக்குதகுந்தாற்போல் மீறுகிறார்கள் மாற்றுகிறார்கள். கர்த்தர் நமக்கு கொடுத்தது **ஒரே ஒரு வாழ்க்கை.** அந்த வாழ்க்கை எத்தனை காலம் வாழ்கிறோம் என்றல்ல. எப்படி அந்த வாழ்க்கையை கர்த்தருக்கு பிரியமானபடி வாழ்கிறோம். கர்த்தருக்காக என்ன செய்கிறோம் என்பதுதான் மிக முக்கியம்.

தாவீது கூறியபடி **"கர்த்தாவே உமக்கு பிரியமானதை செய்ய எனக்கு போதித்தருளும்"** என்றான். சங் 143:10

ஒருவனுக்கு அல்லது ஒருவளுக்கு சரீரத்தில் குறைபாடு உண்டானால் **திருமண நாள்** அன்றே தெரிந்துவிடும். அப்படிப்பட்ட நியாயமான காரணம் உண்டானால் அரசாங்க சட்டப்படி **விவாகரத்து** செய்யலாம்.

இந்த விதமான காரணமில்லாமல் வேறு எந்த காரணத்துக்காகவும் கணவன் மனைவி பிரியக்கூடாது. மத். 19:7ம் வசனத்தில் விபச்சாரத்தால் கையும் களவுமாக பிடிபட்டால் மட்டுமே **விவாகரத்து** செய்யலாம் என்று இயேசு **நியாய பிரமாணகால அடிப்படையில்** அப்படி கூறினார். கூடவே இயேசு **ஆதிமுதலாய் அப்படி இருக்கவில்லை** என்று கூறியிருக்கிறார். அதை அடிப்படையாக வைத்துதான் பவுலும் 1 கொரி 7:10ல் கூறுவதை கவனியுங்கள்.

**விவாகம் பண்ணிக்கொண்டவர்களுக்கு** ஆலோசனை கொடுக்கும்போது நானல்ல **கர்த்தரே கட்டளையிடுகிறதாவது** என்கிறார். **கணவன் மனைவி பிரியக்கூடாது** என்கிறார்.

**திருநெல்வேலியில்** முதலில் இயேசுவை ஏற்றுக்கொண்ட **குளோரிந்தா** என்பவள் அவள் கணவனுக்கு இரண்டாவது மனைவியாய் இருந்தாள். அப்போது அவள் இரட்சிக்கப்படவில்லை. அன்று அது தவறு என்று அவள் அறியவில்லை. வேதத்தை சரியாக வாசித்து தியானித்தபின் வசனத்தின்படி வாழ தீர்மானித்தாள். அதன்பின்தான் ஞானஸ்நானம் பெற்றாள் திருவிருந்து எடுக்க தகுதிபெற்றாள். அந்த இளமை வயதில் அதன் பிறகு அவள் வேறு யாரையும் திருமணம் செய்யாமல் அவள் மரணம் வரை அப்படியே வாழ்ந்து யாரும் அவள் இளமையை குற்றம் சொல்லாதபடி **கர்த்தருக்கும் சபைக்கும்** சாட்சியானாள்.

ஆகவே ஒருவேளை திருமணமான உங்கள் வாழ்வில் அவிசுவாசியான **கணவன்** அல்லது **மனைவி** உங்களைவிட்டு பிரிந்துபோவான், உன்னோடு வாழ பிடிக்கவில்லை என்று கூறினால் பவுல் 14ம் வசனத்தில் கூறுவதுபோல **அவிசுவாசி பிரிந்துப்போனால்** போகட்டும் ஆனால் நீ விவாகரத்துக்கு முயற்சி செய்யாதே என்ற அர்த்தத்தில் கூறுகிறார். விவாகரத்து செய்யப்பட்டவர்கள் இந்த சூழ்நிலையில் பிரிந்துப்போன கணவன் அல்லது மனைவி **மரிக்கும்வரை** நீங்கள் வேறு விவாகம் செய்ய நம் வேதம் அனுமதிக்கவில்லை. அப்படி மீறி திருமணம் செய்தால் அதை **விபச்சாரத்துக்கு சமம்** என்று இயேசு மத்தேயு 19:9ம் வசனத்தில் கூறுகிறார்.

உங்களுக்கு இந்த உபதேசம். உங்களில் சிலர் கைகொள்வது கடினம்தான். ஆனால் 100க்கு 100 வசனத்தின்படி வாழ ஆசைப்படும் விசுவாசிகள் மட்டுமே இதற்கு கீழ்படிவார்கள். **கணவன் குடிகாரன்** அடிக்கிறவன் தாலியைக்கூட அபகரித்தவன் அல்லது அவன் வேறு பெண்ணுடன் குடும்பம் நடத்துகிறான். இப்படி பலர் பல பிரச்சனைகளுடன் சிலர் வாழ்கிறார்கள்.

சில குடும்பங்கள் மனைவியின் வாழ்க்கை சரியில்லை. கணவனை வெறுக்கிறாள். இப்படி பல வித்தியாசமான காரணங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நான் கூறுவது என்னவென்றால் கணவன் அல்லது மனைவி இதில் யார் **மனந்திரும்பி இரட்சிக்கபட்டிருக்கிறீர்களோ** அவர்கள் மட்டும் கர்த்தரின் வசனத்தின்படி கணவனின் அல்லது மனைவியின் தவறான செய்கைகளை சகித்து வாழ முயற்சிசெய்யவேண்டும். பிரிந்து வாழ முயற்சி செய்யக்கூடாது. அப்படிப்பட்ட பிரச்சனையை அனுபவிப்பவர்கள் ஜெபித்து **உபவாசித்து தன் சாட்சியுள்ள வாழ்க்கை** மூலமாய் அதே வீட்டில் அவர்களோடுதான் வாழ வேண்டும். கணவனை விட்டோ, மனைவியை விட்டோ பிரியாமல் எல்லா பிரச்சனைகளையும் அவமானங்களையும் தாங்கி **சகித்து** தம்பதிகள் பிரியாமல் அந்த வீட்டின் நரகவேதனையின் மத்தியில் வாழ்ந்து காட்ட வேண்டும். இதுதான் இயேசு விரும்பும் சாட்சி.

**இரத்த சாட்சியாய் மரிக்க வேண்டும்** என்று சாட்சி கூறும் ஆழமான விசுவாசிகள் **சாதாரண குடும்ப பிரச்சனைகளை** சகிக்க முடியாமல் பிரிந்து வாழ நினைப்பது **மாயமாலமாகும்.** அவர்கள் சரியான விசுவாசிகள் அல்ல.

இந்த விஷயத்திலேயே ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கமுடியாமல் கீரியும் - பாம்பும் போல் இருந்தால் பரலோகத்தில் எப்படி ஒன்றாக வாழமுடியும். இப்படிப்பட்டவர்கள் பரலோக சந்தோஷத்தை கற்பனையில்கூட பார்க்கமுடியாது அப்படியானால் கர்த்தர் எப்படி தம் வருகையில் உங்களை எடுத்துக்கொள்வார் ?

எல்லாவற்றிக்கும் ஒரு முடிவு உண்டு என்று நம் வேதம் கூறுகிறது. நீங்கள் படும் சித்திரவதைகளுக்கும் அவமானத்துக்கும் அநியாயங்களை சகிப்பதற்கும் நிச்சயம் பலன் உண்டு. இதை வாசிக்கும் நீங்கள் **மனம் திரும்பி இரட்சிக்கப்பட்டிருந்தால் மட்டுமே** இயேசுவின்மேல் உண்மையான **அன்பு வைத்திருப்பவர்கள்** மட்டுமே இந்த சோதனையில் வெற்றி பெற முடியும். 1 கொரி 13ம் அதிகாரத்தில் எழுதியபடி இயேசுவின் மேல் நீங்கள் வைக்கும் அன்பு **சகலத்தையும்** தாங்கும், சகிக்கும், நம்பும், உபத்திரவமோ, வியாகூலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோ, மோசமோ, பட்டயமோ, மரணமானலும், ஜீவனாலும், உயர்வானலும், தாழ்வானலும், நம்முடைய கிறிஸ்துவிலுள்ள **தேவனுடைய அன்பை** விட்டு நம்மைப் பிரிக்க முடியாது.

இவைகளெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே நாம் முற்றும் ஜெயம் கொள்கிறவர்களாக இருக்கிறோம் ரோ: 8:36-39

அவனவன் **தன் சிலுவையை** எடுத்துக் கொண்டு என்னை பின்பற்றாதவன் எனக்கு பிரயோஜனமானவன் அல்ல என்று இயேசு கூறினார். ஒருவேளை உன் **மாமியார்,** மாமனார் உன்னை காரணமில்லாமல் சந்தேகப்படும் கணவன் அல்லது மனைவி பிள்ளைகள் நாத்தனார் இவர்களில் யாராவது உங்களுக்கு **சிலுவையாக** அனுமதிக்கப்பட்டிருக்கலாம். அந்த **சிலுவையை** சுமந்து கொண்டுதான் இயேசுவையும் பின்பற்ற வேண்டும என்பது தேவ சித்தமானால் அதை அப்படியே ஏற்றுக்கொண்டு வாருங்கள்.

நீங்கள் **மற்றவர்களை மாற்ற** முயலாமல் உங்களை வீட்டு சூழ்நிலைக்கு ஏற்ப **உங்களையே மாற்றிக் கொள்ளுங்கள்** அப்போது ஒரு நாள் நிச்சயம் மாற்றம் வரும்.

தவறு செய்த மனைவியையோ கணவனையோ **கேள்வி கேட்காதீர்கள்.** அப்படி கேள்வி கேட்டால் உங்கள் மேல் அவர்களுக்கு கோபம் வெறுப்பு உண்டாகும். அது உங்கள் குடும்ப சந்தோசத்தையும் **சரீர உறவைகூட** கெடுக்கும். எல்லாவற்றையும் கர்த்தரிடம் கூற கற்றுக்கொள்ளுங்கள். மாற்றுகிறவர் கர்த்தர் மட்டுமே. 1 பேது 3:1.2.

# 95 நியாய நிரூபணங்கள்

*புரொடஸ்டன்ட் சீர்சிருத்தவாதி* **மார்ட்டின் லூத்தர்**

**ஜாமக்காரன் :-**

புரோடஸ்டண்ட் சபைகள் உருவாக காரணமாக இருந்த கத்தோலிக்க பாதிரியார் தன் சபை - தன் சபையின் உலக தலைவரான போப்பின் தவறான கட்டளைகளை தைரியமாக சபை மக்கள் அறிய ஆலய கதவில் போப்பின் தவறுகளை சுட்டிக்காட்டியும் , கத்தோலிக்க சபை விசுவாசத்தின் தவறான உபதேசங்களை சுட்டிக்காட்டியும் பெரிய காகிதத்தில் எழுதி ஆலய கதவில் ஆணி அடித்து பகிரங்கப்படுத்த, மக்களுக்கு விழிப்புணர்பு உண்டாகி ஒரு பெரும் புரட்சி வெடித்து, அதன் மூலம் பிறந்ததுதான் புரோட்டஸ்டன் சபைகள்.

மார்ட்டின் லூத்தர் அவர்கள் எழுதிய 95 விஷயங்கள் என்ன என்று எனக்கு எழுதிக்கேட்ட வாசகர்களுக்காக வேறு ஊழியர் எழுதியதை வெளியிடுகிறேன்.

## முன்னுரை

அக்டோபர் 31, 1517 சீர்திருத்த மாவீரரான மார்ட்டின் லூத்தர் தமது 95 நியாய நிரூபணங்களை **விட்டன் பர்க்** தேவலாயத்தின் அகன்று உயர்ந்த மரக் கதவிலே ஆணி அடித்து விளம்பரப்படுத்தினார். அதன் விவரங்களாவன.

## நியாய நிரூபணங்கள்

1. தேவன் அனுதினமும் நாம் செய்கிற பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறார். (மத். 4:17)
2. பாதிரியார்கள் பாவ மன்னிப்பை அளிக்க அனுமதி இல்லை.
3. பாவ மன்னிப்பை உடலை வருத்திக்கொள்வதால் பெறமுடியாது.
4. உள்ளான மனம் வருந்துதல் நம்முடைய வெளிப்படையான மாறுதலுக்கு வழி வகுக்கும்.
5. **போப்பானவருக்கு** பாவங்களை மன்னிக்க **அதிகாரம் இல்லை.**
6. தேவன் மன்னித்தால் ஒழிய **போப்பானவர்க்கு மன்னிக்க அதிகாரம் இல்லை.** தேவ மன்னிப்பை அறிவிக்கவே அவருக்கு முடியும்.
7. தன்னை தாழ்த்தி மனந்திருந்தாதவனுக்கு தேவன் பாவ மன்னிபை அருளுவதில்லை.
8. **மரித்தவர்களுக்கு** தேவ வெளிப்படுத்துதல் (வேதம்) எவ்வித பயனும் அளிக்காது.
9. போப் மரணம் ஆபத்து என யாருக்கு தீர்ப்பளித்தாலும், தேவன் நம் மீது அன்புள்ளவராகவே இருக்கிறார்.
10. அறியாமையினாலே குருமார்கள் உத்தரிப்பு ஸ்தலம் ஒன்று உண்டு என மரிக்கும் தருவாயில் உள்ளவர்களிடம் கூறுகின்றனர்.
11. உத்தரிப்பு ஸ்தலம் என்பது திருச்சபைக்கும் அதன்சட்டத்திற்கும் எதிராக விதைக்கப்பட்ட களையாகும்.

12. **மெய் மனந்திரும்புதலை** கண்டறியவே தேவன் **தண்டனைகளை அனுமதித்தார்.**
13. சபை மரிதித்தவர்கள் என்று தீர்ப்பு கூறினாலும் அவர்கள் மரணத்தின் வாயிலாக எல்லா தீர்ப்புகளிலிருந்தும் விடுதலை ஆவார்கள்.
14. தேவ பக்தி அற்று வாழ்ந்தால் உடல் நலம் குறையும்போது பயம் மேலோங்குகிறது.
15. பயமே உத்தரிப்பு ஸ்தலம் ஒன்று உள்ளது என நமக்கு போதிக்கின்றது, வேறென்றுமில்லை.
16. பாவ மன்னிப்பின் நிச்சயம் இல்லாததால் தான் நமக்கு நரகம் உத்தரிப்பு ஸ்தலம் மோட்சம் என்பதை குறித்து பயம் உண்டாக்குகிறது.
17. உத்தரிப்பு ஸ்தலத்தில் **ஆன்மாக்களின் துன்பங்கள் குறையும்** என்பது பொய்யே.
18. உத்தரிப்பு ஸ்தலம் என்பது வேத வசனத்தால் நிறுபிக்கப்படவில்லை.
19. உத்தரிப்பு ஸ்தலத்தில் ஒரு ஆத்துமா வாழும்பட்சத்தில் நம்மை (இரட்சிக்கப்பட்டவர்கள்) போல் முழு இரட்சிப்பின் நிச்சயம் அவர்கள் அடைந்ததாக நிரூபிக்கப்படவில்லை.

20 பரிபூரண மன்னிப்பு என்னும் போப்பின் வார்த்தை செல்லுபடியாகாது.

21. பாவ மன்னிப்பு சீட்டு என்பது ஒரு மனிதனையும் இரட்சிக்காது, மன்னிக்காது.

22 உத்தரிப்பு ஸ்தலத்தில் உள்ள மரித்த ஆத்துமாக்கள் போப்பானவராலோ மரித்தவர்கள் அவரது பூசையால் மன்னிக்கப்பட்டு நித்திய ஜீவன் அடைவதில்லை. உலக வாழ்வின்போதே தங்கள் பாவ மன்னிப்பை பெற வேண்டும்.

23. பூரணமாக்கப்பட்ட (மனந்திரும்பின) பரிசுத்தவான்களுக்கு பாவ மன்னிப்பு வழங்க நமக்கு அதிகாரம் உண்டு என்று கூறும்.
24. இப்படிப்பட்ட பொய் பாவ மன்னிப்பால் அநேகர் வஞ்ஜிக்கப்படுகின்றனர்.
25. போப்பானவருக்கு உத்தரிப்பு ஸ்தலத்தின்மேல் எவ்வித அதிகாரமும் இல்லை.
26. நல்லெண்ணத்தின் அடிப்படையில் போப்பானவர் உத்தரிப்பு ஸ்தலத்தில் உள்ள ஆத்துமாக்களுக்காக வேண்டுதல் ஏறெடுக்கிறார். ஆனால் அந்த வேண்டுதல் கடவுளால் கேட்கப்படுவதில்லை.
27. காணிக்கை பெட்டியில் **பணம் விழுகிற சத்தத்தின் அடிப்படையில்** உத்தரிப்பு ஸ்தலத்தில் உள்ள ஆத்துமாக்கள் விண்ணுலகம் பரப்பதில்லை.
28. காணிக்கை பொருளாசையை பெருக வைக்கும், மன்னிப்பு தேவனால் அருளப்பட வேண்டும்.
29. புனித செவரினு, புனித பாஸ்கல் உத்தரிப்பு ஸ்தலத்தில் நீண்ட காலமாக இருக்க விரும்பினார்களா. விலை கொடுத்து விண்ணேர அவர்கள் விரும்பினார்கள் என்பது தவறு.
30. மனஸ்தாபம் என்பது உண்மையானது என எவராலும் நிச்சமாக கூற இயலாது. முழு பாவ மன்னிப்பு மனஸ்தாபம் அளித்ததாக கூறவும் இயலாது.
31. மன்னிப்பு பத்திரத்தை புரிந்துகொண்டு வாங்குகிறவனை அறிவது அரிது. மெய் மனஸ்தாபம் கொண்டவனை காண்பது அதிலும் அரிது.
32. இப்படிப்பட்ட உறுதி அளிப்பவர்கள் (மன்னிப்பு பத்திரத்தால் இரட்சிப்பு நிச்சயம்) ஆக்கினைக்கே உள்ளாவார்கள்.

33. இப்போதனைகளை (மன்னிப்பு பத்திரத்தால் இரட்சிப்பு நிச்சயம்) போதிக்கிறவர்களை குறித்து அனைவரும் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம்.

34. மன்னிப்பு சீட்டு. சாக்கிரமெந்துகள் பிரயாசித்தங்கள் இவை அனைத்தும் மனித ஏற்பாடுகளே.

35. மன்னிப்பு பத்திரத்தால் இரட்சிப்பு நிச்சயம் என போதிப்பவர்கள் மாறுபட்ட கிறிஸ்தவர்களே

36. மெய் மனஸ்தாபம் உடைய எந்த கிறிஸ்தவனும் இவை (பாவ மன்னிப்பு சீட்டு) இல்லாமல் பூரண மன்னிப்பை கிறிஸ்துவினால் பெற்றிடும் உரிமை உண்டு.

37. **கிறிஸ்துவின் மீட்பால்** மட்டுமே இறந்தவர்களும் உயிரோடிருப்பவர்களும் பாவ மன்னிப்பு சீட்டு இல்லாமலே எல்லா இறையருள் பாக்கியங்கள் பெற உரிமை உண்டு.

38. இப்படி கூறுவதால் போப்பானவர் கூறும் பாவ மன்னிப்பை நாம் உதாசினப்படுத்தலாகாது. அது தெய்வீக கூற்றுகளாய் இருக்கின்றன.

39. மன்னிப்பு பத்திரங்களின் மகத்துவத்தையும் மெய் மனஸ்தாபத்தின் அவசியத்தையும் எந்தவித பண்டிதர்களாலும் (ஒரே நேரத்தில் விளக்க இயலாது)

40. மெய் மனஸ்தாபம் பாவத்தின் தண்டனையிலிருந்த நம்மை காப்பாற்றவும், அப்பாவத்தை வெறுக்கவும் வழிவகை செய்கின்றது.

41. மன்னிப்பு சீட்டை எதிர்க்க நாம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். காரணம் நற்செயல்கள் மூலம் **விண் பாக்கியம் நாம் பெற முடியும்** என்கிற தவறை அவர்கள் செய்திட நேரிடும்.

42. மன்னிப்பு சீட்டு ஒருபோதும் அறச்செயலுக்கு நிகராகாது என மக்களுக்கு நாம்போதிக்க வேண்டும்.

43. பக்குவமாக ஏழைக்கு இறங்குவதும் தேவைப்பட்டவர்களுக்கு கடன் தந்து உதுவுதலும் ஏற்ற செயல் எனவும் பணம் கொடுத்து பாவ மன்னிப்பு சீட்டு வாங்குவதிலும் இது சிறந்தது என மக்களுக்கு நாம் போதிக்க வேண்டும்.

44. பாவ மன்னிப்பு சீட்டின் அடிப்படையில் எவரும் சிறப்படைவதில்லை. மாறாக அன்பின் அடிப்படையிலேயே ஒருவன் சிறப்படைகிறான். (இது விசுவாசிக்கு மட்டுமே பொருந்தும்)

45. இக்கட்டில் உள்ளவர்க்கு உதவி செய்யாமல் பாவ மன்னிப்பு சீட்டுக்கு பணம் செலுத்துகிறவன்மேல் தேவ கோபம் வரும் என நம் விசுவாசிகளுக்கு போதிக்கவேண்டும்.

46. பணம் படைத்தவர்கள் தங்கள் குடும்ப நலனுக்கு பணம் சேமிக்க வேண்டுமே அல்லாமல் மன்னிப்பு பத்திரங்களுக்காக ஒருபோதும் நம் பணத்தை செலவழிக்ககூடாது. என கிறிஸ்தவர்கள் உபதேசிக்கப்படவேண்டும்.

47. மன்னிப்பு சீட்டுகள் வாங்குவது சுய விருப்பத்தை பொறுத்தது. கட்டாயப்படுத்தி எவரும் வாங்கலாகாது என கிறிஸ்தவர்களுக்கு போதிக்க வேண்டும்.

48. போப்பானவர் மக்களின் பணத்தை அல்ல அவர்களின் மெய்யான மனந்திரும்புதலையே விரும்பவேண்டும் என மக்கள் கவனத்திற்கு கொண்டுசெல்ல வேண்டும்.

49. மன்னிப்பு பத்திரத்தின்மேல் நம்பிக்கை வைக்காதவர்கள் அதிகம் நன்மை பெற்றவர்கள். ஆனால் பாவ மன்னிப்பின் தவறான உபதேசத்தை நிராகரித்து கடவுள் பயம் அற்றவர்கள் அதிகம் அவர்கள் மோசத்திற்கு ஆளாவார்கள் என கிறிஸ்தவர்களுக்கு நாம் போதிக்கவேண்டும்.

50. இப்பத்திர முறைகேடுகளை போப் அரசர் அறிய நேர்ந்தால˙பேதுரு ஆலயம் எரிந்து சாம்பலாகட்டும் என்பாரே அன்றி வேறு எந்த முறையிலும் ஆலயத்தை கட்ட முன்வரமாட்டார் என நாம் கிறிஸ்தவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

51. புனித பேதுரு ஆலயத்தை விற்றாவது அம்மக்களுக்கு பணம் ஈந்து அவர்கள் சுரண்டபடுவதை தவிர்ப்பது போப் அரசரின் கடமை என மக்கள் அறிய வேண்டும்.

52. போப் அரசரோ அல்லது அவரது பிரதிநிதிகளோ உத்தரவாதம் தந்தாலும் பாவ மன்னிப்பு பத்திரத்தை கொண்டு இரட்சிப்பு கிடைப்பது என்பது வீன்.

53. பாவ சீட்டை முன்நிறுத்தி பிரசங்கத்தை தடை செய்பவர்கள் கிறிஸ்துவுக்கு எதிரிகளே.

54. பிரசங்கம் முக்கியமானது. அந்த நேரத்தை பாவ மன்னிப்பு பத்திர பிரச்சாரத்துக்கு பயன்படுத்தல் ஆகாது. இப்படி நேரத்தை விரயமாக்குவது திருவசனத்தை அவமதிப்பதாகும்.

55. ஒருமுறை மணியடித்தால் ஒரு ஊர்வலம் ஒரு ஆராதனை என்று பாவ மன்னிப்புக்காக செய்யப்படும் பிரயாசங்கள் ஒழிந்து நூறுமுறை சுவிசேஷம் ஆராதனை என்னும் மணியோசை முழங்குவதை நாம்பிரபலபடுத்தவேண்டும். இதுவே போப் அரசனின் கருத்தாகவும் இருத்தல் வேண்டும்.

56. பாவ மன்னிப்பை போப் ஆனாவர் திருச்சபையின் பரம கருவூலத்தினின்று பகிர்ந்தளிக்கிறார் என்னும் கருத்தை இன்னும் மக்கள் (கிறிஸ்தவர்கள்) அறிந்துகொள்ளவில்லை. தர்கித்தும்புரிந்துகொள்ளவில்லை.

57. மன்னிப்பு பத்திரங்களை விற்பனையாளர்கள˙விற்று தங்கள் பண வருவாயை பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

58. மன்னிப்பு சீட்டுகள் எவ்வித பலன்களையும அளிப்பதில்லை. கிறிஸ்துவின் சிலுவை மரணம் உயிர்தெழுதல் மனிதனுக்கு பாவ மன்னிப்பை ஈந்தளிக்கிறது.

59. புனித லாரன்ஸ் என்பவர் அக்கால கருத்துக்கு இசைய திருச்பையயின் ஏழைகளே திருச்சபையின் செல்வங்கள் என மொழிந்தார்.

60. கிறிஸ்துவால் அருளப்பட்டுள்ள திரவுகோல் திருச்சபையின் செல்வம் என அதிகாரப்பூர்வமாக சந்தேகமின்றி நாம் துனிந்து கூறுகிறோம்.

61. போப் அரசரால் தீர்ப்பிடப்பட்ட ஆக்கினைகளை மன்னித்திட அன்னாரின் தனிப்பட்ட அதிகாரமே போதுமானதாகும்.

62. கடவுளின் மகிமை, கடவுளின் கிருபை ஆகியவற்றாலான அதி பரிசுத்தசுவிசேஷமே திருச்சபையின் மெய் செல்வமாகும்.

63. எனினும் இச்செல்வம் மனித இயல்பின்படி வெறுக்கப்படுகிறது.

64. ஆனால˙இச்செல்வங்களுக்கு மாறாக மன்னிப்பு பத்திரங்கள் முதன் நிலைக்கு மாற்றப்படுகின்றன.

65. எனவே சுவிசேஷம்ஆகிய செல்வத்தை வலையாக பயன்படுத்தி முற்காலத்தில் செல்வந்தர்களை பிடித்தனர்.

66. தற்போதைய மன்னிப்பு பத்திரங்கள் என்னும் வலைகளால் மக்களின் செல்வத்தை வாரிக்கொள்கிறார்கள்.

67. மன்னிப்பு பத்திரங்களையெல்லாம் மகா உன்னத கிருபைகளே என குதர்க்கவாதிகள் உளருகிறார்கள்.

68. ஆயினும் அவற்றை கடவுளின் கிருபையோடும் சிலுவையின் பக்தியோடும் ஒப்பிடுகையில் அவை மிக மிக மலிவான கிருபைகளே ஆகும்.

69. மன்னிப்பு பத்திர பிரச்சாரம் செய்பவர்களை கவுரவமான முறையில் வரவேற்றிட அத்தியட்சர்களும், குருமாரும் கடமைப்பட்டவர்களே.

70. ஆயினும் இப்படி பிரச்சாரம் செய்பவர்கள் தங்களின் சுய சரிதைகளை பிரசங்கிக்கிறார்களா என்பதை அத்தியட்ச குருமார் கண்ணும் கருத்துமாக உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.

71. பாவ மன்னிப்பு பத்திரங்களின் எதார்த்தத்தின் உண்மை தன்மைக்கு மாறாக வசனிப்பவன் புறம்பார்க்கப்பட்டவனும். சபிக்கப்பட்டவனுமாவான்.

72. இப்படி பிரசங்கிறவர்கள் கொண்டுள்ள வரம்புக்கு மீறய அதிகாரம் மற்றும் அவர்களின் பொருளாசை ஆகியவற்றை எதிர்த்து நிற்பவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாவான்.

73. பாவ மன்னிப்பு பத்திர வியாபாரம் பாதிப்படையும்படி சூழ்ச்சி செய்கிறார்கள் என கூறி அத்தகையோருக்கு எதிராக போப் அரசர் முழங்குகிறார்.

74. ஆனால் தூய இறையன்பு வாய்மை ஆகியவை பாதிப்புள்ளாக்கும் என்பவர்களுக்கு எதிராகத்தான் போப் அரசன் இடியென முழங்கவேண்டும்.

75. ஆண்டவரின் தாயாருக்கு அவகீர்த்தி வரும் வகையில் நிந்தனை செய்வது பெருங்குற்றம். அதை மன்னிக்கும் ஆற்றல் மன்னிப்பு பத்திரத்துக்கு உண்டு என எண்ணுவது பயித்தியகாரத்தனம்.

76. சுலபமாக நம் பாவங்களை மன்னிப்பு பத்திரங்கள் மன்னித்திடாது என்பதுதான் உண்மை.

77. தற்போதைய போப் அரசராக புனித பேதுருவே பதவி வகுத்தாலும் பெரிதான கிருபைகளை அவரால் அருள இயலாது என கூறுவது புனித பேதுருவுக்கும் போப்புக்கும் எதிராக நிந்தனையாகும்.

78. 1 கொரிந்தியர் 12:28ன்படி பெரிதான ஈவுகளான சுவிசேஷம். ஆன்மீக ஆற்றல்கள் மற்றும் குணப்படுத்தும் வரங்கள் ஆகியவை போப்பின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவைதான்.

79. போப்பானவரின் இலட்சினையில் பொரிக்கப்பட்டுள்ள சிலுவை சின்னம் கிறிஸ்துவின் சிலுவை சின்னத்தோடு ஒப்பு உமமையுடையதே என கூறுவது தெய்வ நிந்தனையாகும்.

80. இத்தகைய நிந்தனைகளை மக்கள் மத்தியில் பரப்பும் அத்தியட்சர்கள் குருமார்கள் வேத விற்பனர்கள் தேவனுக்கு பதில் கூறியே ஆகவேண்டும்.

81. தான்தோன்றிதனமான மன்னிப்பு பிரச்சார பத்திரத்தின் விளைவாக போப்பின் மீதுள்ள மதிப்பும் மரியாதையும் குறைந்து போகின்றன.

82. உதாரணமாக ஆலயத்தை கட்டும் பணிக்கென பெறப்படும் பணத்தால் உத்தரிப்பு ஸ்தலத்தில் உள்ள ஆத்துமாக்களை போப்பானவரால் வெளிக்கொனர கூடுமானால் எல்லா ஆத்துமாக்களையும் ஏன் வெளியே கொண்டுவர இயலாது.

83. மீட்கப்பட்டவர்களுக்காக ஜெபம் தேவையில்லை என்றால், அது தவறு என்றால். இறந்தவர்களுக்கான சடங்குகள் ஆண்டிருதி நினைவு கூறல் பூஜைகள் ஏன் நிரூபிக்கப்படவில்லை.

84. அவபக்தியுள்ள ஒரு ஆத்துமாவை உத்தரிப்பு ஸ்தலத்தில் நின்று பணத்தால் வெளிக்கொனர முடியுமாகில் பக்தியுள்ள ஒரு நல்ல ஆத்துமாவை அன்பின் பெயரால் உத்தரிப்பு ஸ்தலத்தில் நின்று வெளிக்கொனர கூடாதா?

85. வேத வசனம் இப்போது செயல்படவில்லை என்றார் எப்படி பாவ மன்னிப்பு பத்திரம் உயிர்பெற்றதும் செயலாற்றுவதுமாயிருக்கும்.

86. சீசரைவிட பெரும் செல்வந்தனான போப் ஏன் தன் சொந்த பணத்தை செலவிட்டு ஆலயத்தை கட்டாமல் ஏழை பாமர விசுவாசிகளின் பணத்தை கொண்டு அதை கட்ட முயற்சிக்க வேண்டும்.

87. மெய் மனஸ்தாபத்தால் பூரண மன்னிப்பையும் பெரு வாழ்வையும் பெற்றிடும் உரிமையுள்ளவர்களுக்கு போப் வேறு எதனை கொடுக்க விளைகிறார்.

88. ஒரு நாளில் ஒரு முறை மட்டுமே போப் அரசரால் தரப்படுகின்ற மன்னிப்பும் ஆசிகளும் ஒரே நாளில் நூறு முறை தரப்படுமானால் திருச்சபைக்கு அதைவிட சிறந்த சிலாக்கியமாக வேறு எது இருக்கமுடியும்.

89. பண வருவாயை எதிர்பார்க்காமல் ஆத்துமாக்களின் மீட்பையே போப் நாடுகிறார் எனில் சரிநிகர் திரானியுள்ளவர்களுக்கு மன்னிப்பு சீட்டுகளை அவர் ஏன் நிறுத்திவைக்கிறார்.

90. தனி அதிகாரத்தை பயன்படுத்தி திருச்சபையை அடக்குவது கிறிஸ்தவர்களை துக்கப்படவைப்பதாகும்.

91. போப்பின் விருப்பமாகவே மன்னிப்பு பத்திரம் வழங்கப்படுவதாக அறிவித்தால் மட்டுமே அனைத்தும் சுமூக முடிவுக்கு வரும்.

92. சமாதானம் சமாதானம் என கூறியும் சமாதானம்கொடுக்கமுடியாத போலி தீர்க்கதரிசிகள் ஒழியட்டும்.

93. சிலுவை சிலுவை என்று சொல்லி கிறிஸ்தவர்களின் துன்பம் ஒழிய செய்யும் மெய் தீர்க்கதரிசிகள் வாழட்டும்.

94. தண்டனை மரணம் நரகம் ஆகியவற்றையே அறிந்து கிறிஸ்துவுக்கு பின் செல்ல நாம் வழிகாட்ட வேண்டும்.

95. பல உபத்திரவங்களோடே நாம் மோட்சத்திற்குள் பிரவேசிக்கவேண்டுமே தவிர போலி உத்திரவாதத்தினால் பிரவேசித்திட முடியாது என நாம் உறுதிகொள்ள வேண்டும்.

**முடிவுரை :**

மேலே மார்ட்டின்லூத்தர் அவர்களால் எழுதி அறிவிக்கப்பட்ட அறிக்கையை அறிந்த

போப் கொதித்தெழுந்ததில் ஆச்சரியம் ஒன்றும் அல்ல. பல முயற்சிகள் (ஜெபம். உபவாசம், சுய வெறுப்பு) ஒரு குருவானவராய் இருந்து மேற்கொண்டும் பயன்அளிக்காத நிலையில் ரோமர் 1:17 வாசித்ததின் விளைவாக மார்டின்லூத்தர் பாவ மன்னிப்பின் முழு நிச்சயத்தை பெற்றார். தனி மனிதனாக அந்த அனுபவத்தை உலகிற்கு அறிவிக்க தீர்மானித்தார். வேத வசனத்துக்கு கீழ்படிகிற ஒரு மனிதனைக்கொண்டு தேவனால் என்ன செய்யமுடியும் என்பதற்கு மார்ட்டின் லூத்தர் சிறந்த உதாரணம். அவருடைய சவால்கள் நம்மை மெய் சிலிர்க்க செய்கின்றன. அவர் தன் கொள்கையிலிருந்து சாகும் வரை பின்வாங்கவில்லை. மரண அச்சுறுதலிலும் Here I stand என்றே தன் கொள்கையில் உறுதியாய் நினறார். அன்பு நண்பரே உம்மாலும் தேவன் பலத்த காரியங்களை சபையில் செய்ய முடியும் உணருவீரா.

**ஜாமக்காரன் முடிவுரை :**

**இளம்பங்காளர் திட்டம்** என்ற பெயரில் **பண வேட்டை** நடத்திய சகோ. DGS. **தினகரனும்,** அவர் மகன் **பால் தினகரனும்,** போப் அவர்களின் பாவ மன்னிப்பு சீட்டு வியாபாரத்தைத்தான் பின்பற்றினார்கள், அதன் தண்டனையாக மகளையும் இழந்தார். ஆனாலும் அந்த வியாபாரத்தை இன்னும் விடவில்லை. மார்ட்டின் லூத்தர் எச்சரித்த விஷயமாகிய கத்தோலிக்க தலைவர் போப் அவர்கள் விற்ற **பாவ மன்னிப்பு சீட்டுக்கும்** இவர்களின் இளம் பங்காளர் திட்டத்துக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. ஒரு குடும்பத்தில் பிறந்த அல்லது பிறக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் 2000/- ரூபாய் வீதம் **இயேசு அழைக்கிறார்** நிதிக்கு பணம் அனுப்பினால் 25 வருடத்துக்கு **ஜெபம்** ஏறெடுக்கப்படும். அந்த பிள்ளைக்கு நோய் வராது, விபத்து வராது. இதை **கர்த்தர் சொல்ல சொன்னார்** என்ற இந்த **பொய்யர்களின்** வாக்கை நம்பி இந்த குடும்ப பரம்பரை ஊழியத்துக்கு பணம் அனுப்பியவர்களுக்கும், அனுப்பபோகிறவர்களுக்கும் மார்ட்டின் லூத்தர் எழுதிய 95 அறிக்கைகளில் 71ம் அறிக்கையில் எச்சரித்தபடி இவர்களுக்கும் இந்த **பொய் திட்டத்தை ஆதரிக்கிறவன்** யாராக இருந்தாலும் இவர்கள் தேவ இராஜ்யத்திலிருந்து புறம்பாக்கப்பட்டவனும், **சபிக்கப்பட்டவனுமாவான்** என்ற வார்த்தை மிகவும் பொருந்தும். ஜாக்கிறதை !

இனியாவது இப்படி **ஜெபத்தை விற்கும்** வியாபாரிகளிடம் **காணிக்கை** என்ற பெயரில் பணம் கொடுத்து ஏமாறதபடி எச்சரிக்கிறோம். இதை குறித்து பலமுறை ஜாமக்காரனில் நான் எழுதிவிட்டேன். ஏற்கனவே பணம் அனுப்பியவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் தாங்கள் அனுப்பிய பணத்துக்காக மன்னிப்பு கேளுங்கள். மற்றவர்கள் யாரும் **இளம் பங்காளர் திட்டத்துக்கு** பணம் அனுப்பாதிருக்க எச்சரிக்கை செய்யுங்கள்.

மார்ட்டின் லூத்தரின் 95 அறிக்கைகளிலும் கடவுளின் பெயரால் **பாவ மன்னிப்பு சீட்டை** விற்பனை செய்ததை குறித்து பலமுறை எச்சரிதிருக்கிறார். அதில் தான் இவர் சாடல் அமைந்திருக்கிறது. திரும்ப திரும்ப அதைக் குறித்து மார்ட்டின் லூத்தர் சாடுவதை கவனியுங்கள். தெளிவு பெருங்கள். இந்த **இளம் பங்காளர்** திட்ட வியாபாரம் தகப்பன்- மகன் காலத்தோடு முடியப் போகிறதில்லை. இவர்களின் குடும்ப அங்கங்கள் யாவரும் தொடர்ந்து இந்த ஊழிய வியாபாரத்தை செய்வார்கள். எச்சரிக்கை !.

# நீதிமன்றத்தால் CSI பிஷப்மார் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள்



பிஷப். ராஜவேலு
Vellore Diocese

பண ஊழல் மற்றும் சில காரணங்களால் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு CSI சபை **பிஷப்** பதவிலிருந்து சில பிஷப்மார்கள் நீக்கப்பட்ட விவரங்களை ஏற்கனவே நான் ஜாமக்காரனில் எழுதியுள்ளேன்.

இவைகள் பிஷப்மார்களை அவமானப்படுத்த அல்ல. CSI சபைகள் எவ்வளவு தரம் தாழ்ந்து அரசியல்வாதிகளைவிட மிக கேடுகெட்ட நிலையில் போய்விட்டது என்பதை CSI சபை விசுவாசிகள் அறியவும், ஜெபிக்கவும் இவைகளை வெளியிட்டேன்.



பிஷப் J.J.கிறிஸ்துதாஸ்
Tirunelveli Diocies

1. சிஎஸ்ஐ சபைகளின் வரலாற்றில் பதவியிலிருந்து **முதலாவது** நீக்கப்பட்டவர் **பிஷப் ஜெபசந்திரன்** அவர்கள் தூத்துக்குடி - நாசரேத் -- டையோசிஸ்ஸில் பிஷப்பாக பணியாற்றிவர்.

2. தமிழ்நாடு **கோயமுத்தூர்** சிஎஸ்ஐ டையோசிஸ்ஸில் பலகோடி ஊழல் செய்ததற்காக **பிஷப் துரை** அவர்கள் பதவி நீக்கம் செய்யப்ட்டார்.

3. தமிழ்நாட்டின் மிக முக்கிய திருமண்டலமான **திருநெல்வேலி** CSI டையோசிஸ்ஸின் **பிஷப் J.J. கிறிஸ்துதாஸ்** அவர்களும் **பிஷப்** பதவியிலிருந்து **நீக்கப்பட்டார்.**

4. இப்போது **வெல்லூர்** சிஎஸ்ஐ டையோசிஸ் **பிஷப் ராஜவேலு** அவர்களும் பிஷப் பதவியிலிருந்து **நீக்கப்பட்டார்.**

இந்த பிஷப் பதவி நீக்க தண்டனை யாவையும் -- CSI **சினாடடின்** தலைமை மாடரேட்டர் அவர்களும் **சினாட் நிர்வாக கமிட்டியும்** சில வருடங்களுக்கு முன்பே இவர்களை நீக்கியிருக்கவேண்டும். ஒரு பிஷப் மற்றொரு பிஷப்பை தண்டிக்க தயங்கியதால் இன்று **அரசாங்கம்தான் பிஷப்மார்களின் பண கொள்ளைகளை** கண்டுபிடித்து **நீதிமன்றத்தில்** அது நிரூபிக்கப்பட்டு ஒரு **அவிசுவாசியான** நீதிபதி மூலமாக **பிஷப்மார்களை பதவி நீக்கம்** செய்து கட்டளையிட்டிருக்கின்றனர்.

ஒரு அவிசுவாசி **விசுவாசிகளை, ஆயர்களை, பிஷப்மார்களை** விசாரணை செய்து குற்றவாளி என அறிவித்து பதவி நீக்கம் செய்ய உத்தரவிடுகிறார் என்றால் நம் CSI சபைகளின் இன்றைய நிலை எவ்வளவு தரம் தாழ்ந்து போய்கொண்டிருக்கிறது. ஏன் விசுவாசிகளாகிய நாம் ஏன் அந்த தண்டனையை நிறைவேற்றியிருக்க கூடாது? காரணம் CSI அல்லது லூத்தரனில் பெருபாலான தலைவர்கள் மற்றவர்களை தண்டிக்க தகுதியற்றவர்களாய்போனார்கள். எங்கும் ஊழல், எல்லாரிடத்திலும் ஊழல், எதிலும் ஊழல், இப்படியிருந்தால் CSI & லூத்தரன் சபைகள் பரிசுத்தத்தில் எப்படி வளரமுடியும். ஆயர்களும், பிஷப்மார்களும் பெரும்பாலான நேரங்களை நீதிமன்றங்கள்தோரும் ஏறி இறங்குவதில்தான் செலவழிக்கிறார்கள், மிகப் பரிதாபம் !

!

**வெல்லூர் டையோசிஸ் பிஷப்புடன்** வெல்லூரில் உள்ள பிரபல கல்லூரியான **ஊரிஸ்** கல்லூரி பிரின்ஸ்பாலும் **பதவி நீக்கம்** செய்யப்பட்டுள்ளார். எனக்கு வந்த செய்தியின்படி அந்த **பிரின்சிபால்** அவர்கள் குற்றமற்றவர் என்றும் மிகவும் **தெய்வ பயம்** உள்ளவர் என்றும் **கை சுத்தமுள்ளவர்** என்றும் கேள்விப்பட்டேன்.

அவர் **பாஸ்டர் சகரியா பூணன்** அவர்களின் சபையை சார்ந்தவர். பண கொள்ளையில் இவர் எப்படி அகப்பட்டார்? ஒவ்வொரு அட்மிஷனுக்கும் கல்லூரியில் சேர வரும் மாணவர்களை பிஷப்பின் கையெழுத்து வாங்கி வர சொல்லும்படி கட்டாயப்படுத்தப்பட்டாராம். அப்படி பிஷப்பை பார்க்க போகும் மாணவனின் பெற்றோரிடம் ஒரு சீட்டுக்கு இவ்வளவு என்று பணம் பெற்றுக்கொண்டு அவனை **கல்லூரி சேர்க்கைக்கு** அனுமதிக்க உத்தரவு கொடுப்பாராம்.

இப்படிப்பட்ட **சூழ்நிலையில்தான் பண கொள்ளையில்** தவறு செய்யாத பிரின்சிபால் அவர்களும் இணைக்கப்பட்டு டிஸ்மிஸ் செய்யப்பட்டார் பாவம் இவர் தன்வேலையிலிருந்து ஓய்வு பெற சில மாதங்களே உள்ள நிலையில் பதவி நீக்கத்தால் இத்தனை வருடம் உண்மையாய் உழைத்ததின் **ஓய்வு ஊதிய ரொக்கப்பணம்** கிடைக்காமல் போனது. சில மாதங்களாக **மாத சம்பளமும் கிடைக்காமல்** போனது.

தன் பதவியின் அதிகாரத்தை சட்டப்படி பயன்படுத்தாமல் போனதால் இவரும் **குற்றவாளிகளின் பட்டியலில்** இடம் பெற்றார். தனக்கும் பிஷப் வாங்கிய பணத்துக்கும் சம்பந்தம் இல்லை என்று நிரூபணம் ஆனாலும் தண்டிக்கப்பட்டுவிட்டார். ஒரு **மாணவன்** சேர்க்கை அல்லது **லெக்சரர்** சேர்க்கையை, கல்லூரி **நிர்வாகம்** பிரின்சிபாலுடன் இணைந்துதான் அட்மிஷன் செயல்படத்தவேண்டும். இப்படிப்பட்ட **நிர்வாக** செயலில் **பிஷப்போ,** டையோசிஸ் **லே-செயலரோ** தலையிடக்கூடாதே! **பண ஊழல்** இங்குதான் ஆரம்பிக்கிறது. டையோசிஸ்க்கு-டையோசிஸ் சட்டங்களும் நிர்வாக ஒழுங்குமுறைகளில் வித்தியாசம் உண்டு என்று அறிவேன்.

**"தன் வேலையில் ஜாக்கிறதையாக இல்லாதவன்....".** ..... என்ற வசனத்தின்படி பொருப்பில் உள்ளவர்கள் தங்ளை காத்துக்கொள்ள தன்மேல் அதிகாரிகளின் **வாய்மொழி** கட்டளைகளுக்கு கீழ்படியாமல் எதுவானாலும் எழுத்து மூலமாக கட்டளையிடுங்கள் என்றால் போதுமே, **தன்னையும்** காத்துக்கொள்ளலாம். **பண ஊழல் செய்யும்** அதிகாரிகளும் ஊழல் செய்ய பயப்படுவார்கள்.

எப்படியோ ஒரு அதிகாரத்தின் கீழ் உள்ளவர்கள் மேலே எழுதப்பட்டசம்பவங்களை பாடமாக்கி ! தங்களை கறைப்படாமல் ஜாக்கிறதையாக பார்த்துக்கொள்ளுங்கள்.

## இலங்கையிலும் ஊழல்

கடந்த நவம்பர் மாதம் இலங்கை **ஆங்கிலிக்கன் சபையின்** ஆர்ச் பிஷப் அவர்கள் அட்மிஷனுக்கு **லஞ்ஜம்** வாங்கியபோது அதை **மொபைலில் படம் பிடித்து** ஆங்கிலிக்கன் தலைமையான **இங்கிலாந்து தேசத்துக்கு** அந்த ஆதாரங்கள் அனுப்பப்பட்டது. லஞ்ஜம் வாங்கிய அந்த ஆர்ச் பிஷப்பை இங்கிலாந்து நாட்டுக்கு வரவழைத்து விசாரித்து **குற்றம் உறுதி** செய்யப்பட்டதால் **பிஷப்மார்களுக்கு** கெட்டபெயர் உண்டாகாதவண்ணம் நீங்களாகவே தன் ஆர்வ ஓய்வு VRS எடுப்பதாக எழுதிகொடுத்துவிட்டு **பதவியைவிட்டு விலகுங்கள்.** அப்போது ஒரு பிஷப் ஓய்வு பெற்றால் கிடைக்கும் முழு பணத்தொகையும், **கார், பங்களா** அத்தனையும் நீங்கள் அனுபவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த பிஷப்போ பதவி விலகமாட்டேன் என்று பிடிவாதம் செய்ததால் இங்கிலாந்து தலைமை அவரை **டிஸ்மிஸ் செய்து** எந்த ஆலயத்திலும் ஆராதனை நடத்தவோ வேறு எந்த சபை நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது என்று கட்டளையிட்டு எந்த ஓய்வு பணமும் கொடுக்காமல் வெரும் கையாய் அந்த ஆர்ச் பிஷப் அனுப்பப்பட்டார்.

**இலங்கை** சரித்திரத்தில் ஒரு **ஆர்ச் பிஷப்** டிஸ்மிஸ் செய்யப்படுவது இதுதான் முதல் தடவையாகும். இப்படிப்பட்ட செயலால் இலங்கையின் **புத்தமத அரசாங்கம்** கிறிஸ்தவ சபையைப்பற்றி எவ்வளவு கீழ்தரமாக நினைக்கும். இப்போது இவர் ஸ்தானத்தில் **புது பிஷப்** ஒருவர் நியமிக்கப்பட்டார்.

இந்திய ஊழல் முறையை இந்திய பிஷப்மாரிடமிருந்து **இலங்கை பிஷப்** அவர்கள் ஊழலை காப்பி அடித்தாரா? கேள்வி எழுகிறதே ? பதவி நீக்கம் செய்யப்பட்ட பிஷப்மார்களுக்காக அவர்கள் மனம் திரும்ப ஜெபிப்போம். இப்படி இவைகளை ஜெபத்துக்காக என்று எழுதினாலும் நான் **பிஷப்மார்களையே** குறிவைத்து தாக்குவதாக ஒரு பிஷப் மற்ற பிஷப்மாருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

# கிஸ்தவர்கள்

உலகத்திலேயே முதன்முதல் கிறிஸ்தவர்கள் என்ற பெயர் அந்தியோசியா என்ற துறைமுகப்பட்டிணத்தில் தான் **சீஷர்களுக்கு** கிறிஸ்தவர்கள் என்ற பெயர் இடப்பட்டது. **சீஷன்** என்றால் **பின்பற்றுகிறவன், கற்றுக்கொள்கிறவன்** என்று அர்த்தமாகும். இங்கு சீஷன் என்று குறிப்பிடுவது இயேசு தெரிந்தெடுத்த 12 சீஷர்கள் அல்ல. கிறிஸ்துவின் **வசனத்தின்படி** கிறிஸ்துவைப்போல் வாழ்ந்ததால் அன்றைய **சீஷர்கள் என்று அழைக்கப்பட்ட விசுவாசிகளுக்கு கிறிஸ்தவர்கள்** என்று பெயர் வழங்கப்பட்டது. ஒருவன் **இரத்த சாட்சியாக** மரிப்பதைவிட அவன் கிறிஸ்துவின் சாட்சியாக **வீட்டிலே-உலகத்திலே** சாட்சியாய் வாழ பல கஷ்டங்களை அனுபவித்து வாழ்வதைத்தான் நம் தேவன் விரும்புகிறார்.

இந்த புதுவருடத்திலும், இனி வாழும் காலமெல்லாம் **பேச்சிலும், நடக்கையிலும்,உடையிலும் செய்யும் தொழிலிலும்** சாட்சியோடு வாழ்ந்து நம் இயேசுவுக்கு மகிமையாக வாழ்வோம்.

**நானே தெய்வம் என்பதற்கு நீங்களே சாட்சிகள்** என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசா 43:12

JANUARY 2018

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.